பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 04 புதன்கிழமை (20-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:330



## வீரப்பனின் சடலத்தைப் பார்க்க மக்கள் கூட்டம்! இளைஞர்கள் 'சல்யூட்' அடித்து இறுதி மரியாதை!!

சென்னை,ஒக்.20

அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சந்தனக்கடத்தல் வீரப்பனின் சடலத்தைப் பார்ப்பதற்கு நேற்று முழுவதும் சனக்கூட்டம் அலைமோதிக்கொண்டிருந்ததாகத் தமிழகத்திலிருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

வீரப்பன் மற்றும் அவரது சகாக்களின் சடலங்கள் தர்மபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தன. அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வீரப்பனின் சடலத்தைப் பார்வையிடுவதற்காகத் தர்மபுரி வைத்தியசாலை வளாகத்தில் அலைமோதிக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தமிழகப் பொலீஸார் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டிருந்தனர் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

நேற்று நண்பகலுக்குப் பிறகு வரிசையாகச் சென்று வீரப்பனின் சடலத்தைப் பார்வையிடுவதற்கு மக்கள் அனுமதிக்கப்பட்டனர். ஏராளமான மக்கள் கண்ணீர் மல்கியவாறு வீரப்பனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அங்கு திரண்டிருந்த பெருமளவான இளைஞர்கள் வரிசையாகச் சென்று, களமுனையில் உயிரிழந்த உயர் இராணுவ அதிகாரிகளுக்குச் செலுத்துவது போன்று 'சல்யூட்' அடித்து மரியாதை செய்தனர்.

அங்கு திரண்டிருந்த மக்கள் வீரப்பனின் கொலையை வன்மையாகக் கண்டித்துக் கோஷமிட்டனர்.

வீரப்பன் அதிகாரவர்க்கத்திற்கு எதிரானவரேயொளிய, அவர் சாதாரண மக்களுக்கு நன்மையே செய்துவந்திருந்தார் என்றும் - வீரப்பனை உயிரோடு பிடித்து சட்டத்தின்முன் நிறுத்தியிருக்கலாம். அதைவிடுத்து, (16ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கான மற்றொரு முயற்சியாக நோர்வே அமைச்சர் கொழும்புக்கு!

## ஜனாதிபதி சந்திரிகாவின் அழைப்பை ஏற்று பீற்றர்ஸன் நவம்பர் நடுப்பகுதியில் வருகை

கொழும்பு, ஒக்ரோபர் 20

**சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பதற்காக மற்றொரு சுற்று முயற்சிகளில் நேரடியாக ஈடுபடுமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளை அடுத்து, நோர்வே அனுசரணைக்குழுவின் சார்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனே நேரடியாகக் கொழும்பு வரவிருக்கின்றார்.**

**நவம்பர் மாதத்தில் - பெரும்பாலும் நவம்பர் நடுப்பகுதியில் - அவர் கொழும்பு வருகின்றார். இந்த விஜயத்தின்போது அவர் கிளிநொச்சிக்கும் சென்று புலிகளின் தலைவர்களைச் சந்திப்பார் எனத் தெரிகின்றது.**

தடைப்பட்டுள்ள அமைதிப்பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகக் கொழும்புக்கான நோர்வேத் தூதுவரும், அனுசரணைக் குழுவின் உறுப்பினருமான ஹான்ஸ் பிரட்ஸ்கரை அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துப் பேசியிருந்தார்.

அந்தப் பேச்சுக்களின்போது, நோர்வே (16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் குடும்பஸ்தர் நேற்று சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு மாவட்டத்தின் பொலீஸ் பிரிவிற்குற்பட்ட ஐயங்கேணி பாரதிபுரம் பிரதேசத்தில் வைத்து நேற்றும் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். கடந்த மூன்று நாள்களில் நடந்த மூன்றாவது கொலை இது.

கதிர்காமத்தம்பி கணேசமூர்த்தி (வயது-42) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டார் எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் இவர் தனது வீட்டில் இருந்த வேளை அங்கு வந்த இனந்தெரியாத ஆயுத பாணிகள் ரி-56 ரக துப்பாக்கியால் இவரை நோக்கிச் சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பிச் (16ஆம் பக்கம் பார்க்க)

## அவசர மருத்துவ சிகிச்சைபெற கேணல் சூசை வெளிநாடு பயணம்




கொழும்பு, ஒக்.20

கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை மருத்துவ சிகிச்சைக்காக நேற்று வெளிநாடு ஒன்றுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் அவரும், அவரது மருத்துவக் குழுவினரும் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விசேட ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு கொழும்புக்குச் சென்றனர். நேற்று விடிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து விமானமொன்றில் அவர்கள் வெளிநாடு புறப்பட்டனர்.

இந்திய அமைதிப்படையுடனான மோதலில் காயமடைந்த சூசையின் தோள்மூட்டில் தொடர்ந்து தங்கியுள்ள ஒரு சன்னத்தினால் அவர் கடும் உபாதைக்கு உள்ளாகியிருந்தார் (16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைத் தளபதி சொர்ணத்துடன் தமிழ் எம்.பிக்கள் கலந்துரையாடல்



கொழும்பு,ஒக்.20

திருகோணமலை மாவட்டத்தில் அரசியல் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு சந்திப்புக்களையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக நேற்றுக்காலை 9 மணியளவில் சம்பூரில் புலிகளின் நடுவகப் பணியகத்தில் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்க் கூட்டமைப்பு முன்னாள் எம்.பி.

## கிங்ஸ்லி இராஜநாயகம் நேற்று மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

காத்தான்குடி,ஒக்.20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வென்றவரான கிங்ஸ்லி இராஜநாயகம் (வயது 63) நேற்று மட்டக்களப்பில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். மக்கள் வங்கியின் வடபிராந்திய முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளராகவும் கடமையாற்றியவர் அவர். சம்பவத்தில் அவரது (16ஆம் பக்கம் பார்க்க)

### அடுத்த ஆண்டு செலவினத்தில் அதிக தொகை

## பாதுகாப்பு அமைச்சுக்கு ரூ. 5,630 கோடி ஒதுக்கீடு!

கொழும்பு,ஒக்.20

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கே ஆகக்கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின பொறுப்பிலிருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கு 5 ஆயிரத்து 630கோடி ரூபாவும், ரத்னசிறி விக்கிரமநாயக்காவின் தலைமையிலான பொது (16ஆம் பக்கம் பார்க்க)

NSB
சேமிப்பு மாதம்

சேமிப்பு முதிர்ந்த காலத்தில்

ஒக்டோபர் 1 - 31 வரையான NSB சேமிப்பு மாதத்தில், கௌரவ கணக்கில் பணம் வைப்புச் செய்ய ஆரம்பியுங்கள்.

- ரூபா 100,000/-திற்கும் கூடுதலாக ஒரு வருடத்திற்கு மேல் வைப்பு செய்பவர்கள் வருடாந்தம் நடத்தப்படும் பரிசிழுப்புகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெறுவர். பரிசை வெல்லும் 10 அதிர்ஸ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் புனித தலங்களை தரிசிப்பதற்கு அல்லது அதற்கு சமமாக 50,000/- ரூபாவை பெறும் வாய்ப்பினை பெறுவர்.
- ரூபா 100,000/-இற்கு கூடுதலாக வைப்புச் செய்துள்ள வைப்பாளர்கள் ஏப்ரல் அல்லது டிசெம்பர் மாதங்களின் 3,000 ரூபாவை பண்டிகைக்கால முற்பணமாக பெறவும் முடியும்.



தேசிய சேமிப்பு வங்கி- உங்கள் குடும்ப வங்கி





ஊடகவியலாளர் நிமலராஜனின் கொலைச் சூத்திரதாரிகளைச் சட்டத்தின்முன் நிறுத்துமாறுகோரி யாழ். பஸ்நிலையம் முன்பாக நேற்று நடத்தப்பட்ட அடையாள எதிர்ப்புப் போராட்டத்தின்போது சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு யாழ். குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள்...

# தலைநகரில் நேற்று 6 இடங்களில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்!

கொழும்பு,ஒக்.20

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து நேற்று தலைநகர் கொழும்பில் 6 இடங்களில் ஐக்கிய தேசியக்கட்சி பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

கொள்ளுப்பிட்டி, மருதானை, தொழில்நுட்பக் கல்லூரிச் சந்தி, ஹைட் பார்க் கோணர், கொம்பனித்தெரு மற்றும் கொச்சிக்கடை ஆகிய ஆறு இடங்களிலேயே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆறு இடங்களிலும் ஒரே நேரத்தில் நண்பகல் 12 மணிமுதல் 12.30 மணிவரை ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்திலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை வகித்தனர்.

பொருள்களின் விலை அதிகரிப்பைக் கண்டித்து செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை ரயில்வே நிலையத்துக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் நடத்திய பெரும் ஆர்ப்பாட்டத்தையடுதது இடம்பெற்ற இரண்டாவது தொடர் ஆர்ப்பாட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர, இம்மாதம் 21ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை கண்டி, பதுளை, மாத்தறை, சிலாபம், இரத்தினபுரி, காலி ஆகிய இடங்களிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (க-4)






## மட்டக்களப்பில் கொல்லப்பட்டோரில் இருவருக்கு நாட்டுப்பற்றாளர் பட்டம்

மட்டக்களப்பு,ஒக்.20

மட்டக்களப்பில் கடந்த சில தினங்களில் சுட்டுக்கொல்லப்பட்ட இருவருக்கு விடுதலைப் புலிகள் 'நாட்டுப்பற்றாளர்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

மட்டக்களப்பு புதுநகரில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தேசவிரோதிகள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் வீரச்சாவடைந்த புதூர் 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரசூரியம் மகேஸ்வரன் அல்லது தினேஷ் -

நேற்றுமுன்தினம் அதிகாலை தேசவிரோதிகளின் துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவடைந்து வித்துடலாக மீட்கப்பட்ட நாவற்காடு கரவெட்டியைச் சேர்ந்த புவனசிங்கம் பாக்கியரெத்தினம் அல்லது சோதிபாலன் -

ஆகிய இருவரையுமே தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டுப்பற்றாளர்கள் என அறிவித்துள்ளனர். இது தொடர்பாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை நேற்றுமுன்தினம் மாலை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இதனை அறிவித்துள்ளது.

அவர்கள் இருவரது வீரச்சாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறை ஆழ்ந்த அனுதாபங்களையும் வீரவணக்கத்தையும் தெரிவித்துள்ளது. (க-4-7)

## 'ஹன்ரர்' தடம்புரண்டு பதினைந்து பேர் காயம்

### கோண்டாவிலில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

கோண்டாவில் பகுதியில் ஹன்ரர் வாகனம் ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த 15பேர் காயமடைந்தனர்.

இவர்களில் படுகாயமடைந்த ஏழு பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த இ.தீபன்ராஜ் (வயது 18), க.சிவலிங்கம் (வயது 40), மு.திருநாமம் (வயது 67), எஸ்.சின்னப்பு (வயது 43)- வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஐ.ஸ்ரீதரன் (வயது 35), கொழும்புத்துறையைச் சேர்ந்த ந.பார்த்தீபன் (வயது 21), ந.கந்தப்பு (வயது 55) ஆகியோரே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களாவர்.

நேற்று கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றில் கலந்துகொணடு மயானத்துக்குச் சென்றுவிட்டு ஹன்ரர் வாகனத்தில் திரும்பிக்கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.(4-7-13-15-ரி)

## வெள்ளை வானில் வந்தோரால் 'ஹன்ரர்' வாகனம் தீவைப்பு!

### குடத்தனையில் சம்பவம்

கரவெட்டி,ஒக்.20

வடமராட்சி குடத்தனைப் பகுதியில் திருட்டுத் தனமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்த ஹன்ரர் வாகனம் ஒன்று வெள்ளைவானில் வந்தவர்களால் பெற்றோர் ஊற்றி எரிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இரவு வேளையில் ஹன்ரர் வாகனத்தில் சிலர் மணல் ஏற்றிக்கொண்டிருந்தனர் என்றும் - அப்போது இரு வெள்ளை வான்களில் அங்கு வந்தவர்கள் ஹன்ரரை நோக்கி வாள்கள் சகிதம் நடந்துவர ஹன்ரரின் சாரதி, நடத்துநர் மற்றும் மணல் ஏற்றிக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் அங்கிருந்து ஓடிவிட்டனர் எனவும் -

வெள்ளைவானில் வந்தவர்கள் குறிப்பிட்ட ஹன்ரரின் என்ஜின் மற்றும அதன் சில்லுகளின் மீது பெற்றோலை ஊற்றித் தீமூட்டினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. வாகனத்தின் பெருமளவு பாகங்கள் எரிவடைந்த நிலையில், அங்கேயே ஹன்ரர் நேற்று முழுவதும் நின்றது. இச்சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-7-70)

## இராணுவப் பேச்சாளர் புதியவர் நியமனம்

இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகின்றார்.

தற்போது 232ஆவது படையணிக்குத் தலைமை வகிக்கும் பிரிகேடியர் தயா ரத்நாயக்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் புதிய இராணுவப் பேச்சாளராக நியமனம் பெறுகின்றார். இராணுவத் தலைமையகம் கேணல் சுமேத பெரேராவை அப்பதவியிலிருந்து நீக்கியிருப்பதாக நேற்று உத்தியோகபூர்வமாக அவருக்கு அறிவித்துள்ளது.

கேணல் சுமேத பெரேரா காணி வாங்கிய விவகாரத்தில் நீதிமன்றில் அவருக்கு எதிராகக் கிரிமினல் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருக்கும் நிலையில் இராணுவப் பேச்சாளர் பதவியிலிருந்து இராணுவத் தலைமையகம் அவரை நீக்கியுள்ளது. அவரது வழக்கு விவகாரம் முடிவுறும் வரை இராணுவத் தலைமையகத்தில் எவ்வித பொறுப்பும் அவருக்கு வழங்கப்படமாட்டாது எனத் தெரியவருகிறது. (4-7)

## இளைஞன்மீது சித்திரவதை

வலி.வடக்கு,ஒக்.20

இளைஞர் கும்பல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அளவெட்டி வடக்கு தேரெட்டி என்ற இடத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் கஜிபன் (வயது 19) என்பவரே இவ்வாறு ...ஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவர் ...வார்.

... மூன்று நாள்களுக்கு முன்னர் இவர் காணாமற்போயிருந்தார். இது தொடர்பாக இந்த இளைஞனின் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் விடுதலைப் புலிகளிடமும் இளவாலைப் பொலீஸாரிடமும் முறைப்பாடு செய்திருந்தனர்.

தற்போது காணாமற்போய் மூன்றாம் நாள் இவர் அரைமயக்கத்தில் மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-86)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.20

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30மணிமுதல் மனோகரா மைதானத்தில் இடம்பெறும் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 2.30 மணி - நெல்லியடி ம.ம.வி. எதிர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

★ பிற்பகல் 3.30 மணி - உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலை எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி. (8)

## புங்குடுதீவு ஆஸ்பத்திரி புனரமைப்புக்கு அபிவிருத்திச் சபை அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.20

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை மற்றும் இடப்பெயர்வினையடுத்து பாரிய சேதமடைந்துள்ள புங்குடுதீவு அரசினர் மாவட்ட மருத்துவமனையைப் புனரமைப்பதற்கு வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

கடந்த 14ஆண்டுகளாக முழுமையாக இயங்காதிருந்த இந்த வைத்தியசாலை, அண்மையில் நிரந்தர வைத்திய அதிகாரி மற்றும் ஊழியர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து முழுமையாக இயங்கி சேவையாற்றிவருகிறது.

முழுமையாக இயங்கும் இவ்வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகளை எளிதாக மேற்கொள்ள வசதியாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரனின் ஆலோசனைக்கமைய இந்த அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 11மணிக்கு வைத்தியசாலை வெளிநோயாளர் மண்டபத்தில, வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.இராசையா தலைமையில் அங்குரார்ப்பண வைபவம் இடம்பெறும். (ஐ-15)

### உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்தம்:

## இந்திய உயர்குழுவினர் நேற்று பாதுகாப்புச் செயலருடன் பேச்சு

கொழும்பு,ஒக்.20

இந்திய - இலங்கை உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்த நகல் தொடர்பில் ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் இலக்கில் இலங்கை வந்துள்ள இந்திய உயர்மட்டக்குழு நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து சிறில் ஹேரத் தெரிவித்ததாவது:-

உத்தேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பில் இறுதித்தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. ஒப்பந்தத்தில் இரு நாடுகளுக்கிடையிலான இராணுவப் பயிற்சி, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், கரையோரப் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பேச்சு நடக்கும். எப்போது ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது என்பது விரைவில் முடிவெடுக்கப்படும்.

ஒப்பந்தம் தொடர்பான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.

எனினும், இந்த ஒப்பந்தம் அமைச்சு மட்டத்திலா அல்லது அதிகாரிகள் மட்டத்திலா கைச்சாத்திடப்படும் என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. - என்றார் அவர்.

உத்தேச ஒப்பந்தம் தொடர்பாக ஆராய்வதற்கு இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் உட்பட ஐவர் கொண்ட குழு இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-4-7)

# கண்ணில் ஏற்பட்ட நோய்க்குச் சிகிச்சை பெற வந்தபோதே வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார்!

தமிழக, கர்நாடக பொலிஸாருக்கு 40 ஆண்டு காலமாக சிம்மசொப்பனமாக இருந்துவந்த சந்தனமரக் கடத்தல்காரனான வீரப்பன் (வயது 59) நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 11.20 மணிக்குத் தமிழகம், தர்மபுரி அருகே பொலஸ் அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது கூட்டாளிகளான சேத்துக்குளி கோவிந்தன், சந்திரகௌடா, சேதுமணி ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

தர்மபுரி - ஈரோடு இடையிலான காட்டுப் பகுதியில், தமிழக மேலதிக பொலீஸ்மா அதிபர் விஜயகுமார் தலைமையிலான அதிரடிப்



படையினர் இவர்களைச் சுட்டுக்கொன்றனர்.

வீரப்பன் கண்புரை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அதற்குச் சிகிச்சைபெற இரண்டு முறை காட்டிலிருந்து வெளியேவந்து சென்றிருக்கின்றார் என்கின்றனர் பொலீஸார். மூன்றாவது முறையாக வீரப்பன் காட்டிலிருந்து வெளியே வந்தபோது அவனுடன் வந்த ஒருவர் பொலீஸுக்குத் தகவல் கொடுத்துள்ளார். உடனடியாக வீரப்பனை மடக்கிய பொலீஸ் அவரைச் சுட்டுக்கொன்றனர் என்று கூறப்படுகின்றது.

வீரப்பனைச் சுட்டுக்கொன்றது பற்றி அதிரடிப்படைத் தலைவர் விஜயகுமார் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

## பொலீஸ்மா அதிபரின் பேட்டி

வீரப்பன் பற்றி ரகசியப் புலனாய்வுத்துறை மூலம் எங்களுக்குத் தகவல் கிடைத்தது. வீரப்பன் ஓர் அம்புலன்ஸ் வானில் காட்டிலிருந்து தர்மபுரிப் பகுதிக்கு வருவதாகத் தகவலில் கூறப்பட்டது. இதையடுத்து, அதிரடிப்படை பொலீஸார் நேற்றுமுன்தினம் 3 பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு பாதையிலும் ரோந்து நடத்தினர்.

இந்நிலையில், தர்மபுரி அருகே 8ஆவது கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாடி என்ற இடத்தில் சந்தேகத்துக்கிடமாக 'சேலம் ஆஸ்பத்திரி' என்ற பெயரில் அம்புலன்ஸ் வண்டி வந்தது. அந்த வண்டியில் எழுதப்பட்டிருந்த சேலம் என்ற ஆங்கில எழுத்துத் தவறாக இருந்தது.

ரி.என்.48-6453 என்ற எண்ணுடன் உள்ள அந்த வண்டியை நிறுத்தச்சொல்லி நாங்கள் அறிவித்தோம். ஆனால், அம்புலன்ஸ் நிற்காமல் சென்றுகொண்டே இருந்தது.

செல்லியம்பட்டி அருகே நாங்கள் அந்த அம்புலன்ஸ் வானை மடக்கி நிறுத்தினோம். முதலில் உள்ளே இருப்பது யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. எத்தனைபேர் இருக்கிறார்கள் என்றும் தெரியவில்லை. ஆனால், வீரப்பன் இருப்பது உறுதியாகத் தெரியவந்தது. உடனே நான் மைக் மூலம் 'யாரையும் சுடமாட்டோம். வெளியே கையை நீட்டியபடி வான் பின்பக்கமாக இறங்கி சரண் அடையுங்கள்' - என்று எச்சரிக்கை விடுத்தேன்.

2 நிமிடம் எந்தப் பதிலும் இல்லை. திடீரென வீரப்பன் எங்கள் மீது சுட்டான். உடனே நாங்கள் மணல் மூடை அடுக்கப்பட்ட பதுங்கு இடத்துக்குப் பின்னால் நின்று மீண்டும் எச்சரித்தோம்.

ஆனால், இந்தத் தடவையும் வீரப்பன் கேட்கவில்லை. 3 தடவை எச்சரித்தும் அவன் எங்களைச் சுட்டுவிட்டுத் தப்பி ஓடுவதில் குறியாக இருந்தான்.

எனவே, இயந்திரத் துப்பாக்கியால் வானை சல்லடையாக்க முடிவுசெய்தோம்.

முதலில் வீரப்பன் அம்புலன்ஸ் வண்டியிலிருந்து துப்பாக்கியால் அதிரடிப்படை வண்டியை நோக்கிச் சுட்டான். இதில் அதிரடிப்படை பொலீஸ்காரர் தண்டபாணி குண்டு பாய்ந்து காயமடைந்தார்.

இதையடுத்து, அதிரடிப்படைப் பொலீஸார் சரமாரியாக அதிநவீன துப்பாக்கியால் வீரப்பன் இருந்த அம்புலன்ஸ் வண்டியை நோக்கிச் சுட்டனர். இதில் அம்புலன்ஸ் வான் சல்லடையாகத் துளைக்கப்பட்டது.

இதில் வீரப்பன் அதே இடத்தில் கொல்லப்பட்டான். மேலும் 3 பேர் குண்டுக் காயத்துடன் உயிருக்குப் போராடினர். அவர்களைத் தர்மபுரி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்தோம். ஆனால், வழியிலேயே சேத்துக்குளி கோவிந்தன், சேதுமணி, சந்திர கௌடா ஆகிய 3 பேரும் இறந்துவிட்டனர்.

மேலும், இந்தத் தாக்குதலின்போது அம்புலன்ஸ் வானிலிருந்து ஒருவர் தப்பியோடிவிட்டார். வீரப்பன் மீசையை 'ட்ரிம்' செய்து பொலீஸ் கட்டிங் செய்து ஜீன்ஸ் அணிந்து வந்துள்ளார்.

- இவ்வாறு விஜயகுமார் கூறினார்.

வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளின் உடல்கள் தர்மபுரி அரசு மருத்துவமனையிலுள்ள தனி அறையில் வைக்கப்பட்டன. துப்பாக்கி ஏந்திய பொலீஸார் அந்த அறை முன்பு நிறுத்தப்பட்டனர்.





நேற்று வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளின் உடல்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டன. வீரப்பன் உடலை அவன் மனைவி முத்துலட்சுமி அல்லது உறவினர்களிடம் ஒப்படைக்க அதிரடிப்படையினர் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை -

வீரப்பன் மற்றும் அவரது சகாக்களை சுட்டுக்கொன்ற நடவடிக்கையில் ஈடுபட்ட அதிரடிப்படை வீரர்கள் 752 பேருக்கும் பதவி உயர்வுகள் உட்பட சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டு அதிரடிப்படைக்கு தலைமை வகித்த விஜயகுமார் உட்பட இதில் இடம்பெற்றுள்ள 752 பேருக்கும் அவர்கள் விரும்பும் இடத்தில் வீடுகளும் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொருவருக்கும் தலா 3லட்சம் ரூபா பணமும் வழங்கப்படும் என்றார் ஜெயலலிதா. வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டதாக விஜயகுமார் தொலைபேசியில் தெரிவித்ததே தனது அரசியல் வாழ்வில் தனக்குக் கிடைத்த மிகச் சிறந்த செய்தி என்றும் சொன்னாராம் ஜெயலலிதா.

(க-8-7)

## 120பேரைக் கொன்றதற்காகத் தேடப்பட்டவர்

பல பொலீஸ் அதிகாரிகள் உட்பட 120 பேருக்கு மேற்பட்டவர்களைக் கொலை செய்தார்கள் என்பது தொடர்பாகவும் 300 இற்கு மேற்பட்ட யானைகளைக் கொன்று தந்தங்களைக் கொள்ளை அடித்தது தொடர்பாகவும் தேடப்பட்டு வந்தவர் வீரப்பன்.

வீரப்பனை அல்லது அவரது கூட்டாளிகள் சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கௌடா, சேதுமணி ஆகியோரைப் பிடித்துக்கொடுத்தாலோ வீரப்பன் கும்பலைப் பிடிக்க உதவும் தகவல்களைத் தெரிவித்தாலோ ரூபா 5.5 கோடி பரிசு வழங்கப்படும் என்று கடந்த ஆண்டு ஏப்ரலில் தமிழக அரசு அறிவித்திருந்தது.

அதேபோல வீரப்பனைப் பிடித்துக்கொடுப்போருக்கு ரூபா 5 கோடி பரிசு அளிக்கப்படும் என்று கர்நாடக அரசும் கடந்த ஆண்டு அறிவித்திருந்தது. அவரைப் பிடிக்க கர்நாடக அரசு மட்டுமே ரூபா 31 கோடி செலவிட்டுள்ளது. அதே போல் தமிழக அரசும் ரூபா 1,500 கோடிகளைச் செலவிட்டுள்ளது.

பழம்பெரும் கன்னடத் திரைப்பட நடிகர் ராஜ்குமார், தமிழக பொலீஸ் பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர் சிதரம்பரநாதன் உட்படப் பலரைக் கடத்திச் சென்றவர் வீரப்பன். மூத்த அரசியல் தலைவர் பழ. நெடுமாறன், பத்திரிகையாளர் ஆர்.கோபால் உள்ளிட்டவர்கள் காட்டுக்குச் சென்று சமரசம் பேசி, நடிகர் ராஜ்குமாரை விடுவித்து வந்தனர். அவரைப் பிடிக்க எல்லைப் பாதுகாப்புப் படையையும் சில ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசு அனுப்பி வைத்தது. ஆனால், அவர்களாலும் அவரைப் பிடிக்க முடியவில்லை. அதைத் தொடர்ந்து மீண்டும் தமிழக மற்றும் கர்நாடக அதிரடிப் படையினர் இணைந்து வீரப்பனைத் தேடும் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.

(க-8)

# பர்மா அரசில் தலைமை மாற்றம்?

மியன்மர் (பர்மா) நாட்டின் இராணுவ ஆட்சியாளராக இருந்த பிரதமர் கின் நியூன்ட் அந்தப் பதவியில் இருந்து அகற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர் கைதுசெய்யப்பட்டாரா என்பது பற்றிய தெளிவான தகவல்கள் இல்லை.

இந்த விவகாரம் பற்றி பர்மாவின் உள்ளே இருந்துதெளிவான உத்தியோகபூர்வமான தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

ஆனால், தனது அண்டை நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பதற்றம் குறித்து தாய்லாந்து அமைச்சரவை உடனடியாகக் கூடி ஆராய்ந்துள்ளது.

அதேசமயம் பர்மிய அரசில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்று தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சின்வத்ரா தெரிவித்தார். பிரதமர் நியூன்டேயே மாற்றப்பட்டார் என்று தாய்லாந்து இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மியன்மர் தலைநகர் ரங்கூனில் இருந்து பி.பி.ஸியிடம் பேசிய சிலர், அங்குள்ள இராணுவ உளவு அமைப்பின் தலைமையகமும் முன்பாகவும் நகரிலும் மேலதிகப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர்.

பிரதமரின் இடத்திற்கு இராணுவத்தின் சிரேஷ்ட ஜெனரல் தான்ஷெப் பொறுப்பேற்றுள்ளார் என்று கருதப்படுகின்றது.

பிரதமருக்கும் இராணுவத்தின் சிரேஷ்ட ஜெனரலான தான்ஷெப்புக்கும் இடையில் கடந்த மாதத்திலேயே அதிகார மோதல்கள் ஆரம்பித்துவிட்டன என்று வெளிநாட்டு இராஜீய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தான்ஷெவ்வும் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள மவுங் அய்யுமே இராணுவத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றார்கள். கடந்த மாதத்தில் பிரதமருக்கும் தான் ஷெவ்வுக்கும் இடையில் அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதனைத் தொடர்ந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார். கடும்போக்கு இராணுவ ஜெனரல்கள் பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

மியன்மரில் ஜனநாயகத்தை நிலை நாட்டப் போராடும் ஆங்ஷான் சூகி விவகாரத்திலேயே பிரதமருக்கும் தான்ஷெவ்வுக்கும் இடையில் கருத்து மோதல்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. சூகி மீதான தடைகளைத் தளர்த்தி நாட்டில் ஜனநாயகத்தை மெல்ல மெல்லக் கொண்டுவருவதற்குப் பிரதமர் ஒரு வழிகாட்டி வரைபடத்தைத் தயாரித்தார். ஆனால் தான்ஷெவ் அந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்கின்றார். சூகி வெளியே விடப்பட்டால் அது இராணுவ அரசுக்கு பெரும் நெருக்கடியாகிவிடும் என்று அவர் கருதுகின்றார். சூகி தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

(க-8)

### உலக அரங்கில்

# அல்கெய்டாவுடன் இணைந்து செயற்பட ஈராக்கிய தீவிரவாத அமைப்பு ஒன்று முடிவு

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா தீவிரவாத அமைப்புடன் இணைந்து செயல்பட, ஈராக்கைச் சேர்ந்த தீவிரவாத அமைப்பான அபு முசாப் அல்-சர்காவி முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அந்த இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

அல்கெய்டா இயக்கத்துடன் கடந்த ஏழு மாதங்களுக்கு முன்பே தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயன்றோம். ஆனால், அந்த முயற்சி கைகூடவில்லை. கடவுளின் கருணையால் இப்போது மீண்டும் இரு அமைப்புகளும் இணைந்து செயற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இஸ்லாமின் எதிரிகளை அழிக்க ஒஸாமா பின்லேடனால் மட்டுமே முடியும். எனவே, தான் அல்கெய்டாவுடன் இணைந்து செயற்பட முடிவு செய்துள்ளோம்.

- இவ்வாறு அல்-சர்காவி தெரிவித்துள்ளது.

ஈராக்கில் சமீபத்தில் நடைபெற்ற பல முக்கிய குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு காரணமான அமைப்பு அல்-சர்காவி, குறிப்பாக தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியதில் அல்-சர்காவிற்கு முக்கிய பங்கு உண்டு. எனவே, இரு தீவிரவாத அமைப்புகளும் இணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளதால் ஈராக்கில் தாக்குதல் சம்பவங்கள் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகின்றது.

(க-8)

## ஈராக் பலூஜா நகர் மீது மீண்டும் உக்கிரத் தாக்குதல்

பக்தாத்,ஒக்.20

ஈராக்கின் பலூஜா நகர் மீது நேற்றுமுன்தினம் இரவும் அமெரிக்கப் படைகள் கடும் விமானத் தாக்குதலை நடத்தின. அங்குள்ள தீவிரவாதிகளுக்கு எதிரான படை நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

அபு முஸாப் அல்-சர்காவி அமைப்பினைச் சேர்ந்த தீவிரவாதிகளின் வலைப்பின்னல் கட்டடங்களே அடித்து நொறுக்கப்பட்டன என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ரமழான் நேரத்தில் ஈராக்கிய அரச இலக்குகள் மீது சர்காவி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதுதான் இந்தத் தாக்குதலின் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

பலூஜா நகரில் உள்ள தீவிரவாதிகளான அரசிடம் ஒப்படைக்கவேண்டும் அல்லது சரணடையச் செய்யவேண்டும் என்று ஈராக்கிய அரசு அங்குள்ள மக்களிடம் வேண்டுகோள் விடுத்தது. இல்லையேல் கடும் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அது முன்னதாகவே எச்சரித்திருந்தது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக சுயாதீனச் செய்திகள் எவையும் கிடைக்கவில்லை.

அமெரிக்கப் படையினரின் தாக்குதல் அதிகரித்திருப்பதை அடுத்து பலூஜாவில் உள்ள மக்கள் பலர் வெளியேறி வருகின்றனர்.

அதேசமயம், பலூஜா நகர் உட்பட நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் சட்டவிரோத ஆயுதங்களைப் பணத்தைக் கொடுத்து வாங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து ஈராக்கிய அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் இதுகுறித்து அவர்கள் அமெரிக்க இராணுவத்துடனும் பேசியும் வருகின்றனர்.

(க-8)

# இந்தியப்படையால் யாழ். ஆஸ்பத்திரியில் கொல்லப்பட்டோருக்கு நாளை அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையின்போது, இந்திய அமைதிப்படையினால் சுட்டுக் கொல்லப்பட்ட டாக்டர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் உட்பட 21பேரினதும் 17ஆவது நினைவு தினம் நாளை அங்கு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

21பேரினதும் உருவப்படங்கள் அமைக்கப்பட்ட மண்டபத்தில் அவர்களது ப்டங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலர்தூவி, ஈகச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்படும்.

முதற்சுடரை வைத்தியசாலைப் பணிப்பாளர் ஏற்றிவைப்பார். எஞ்சிய 21பேரினதும் ஞாபகார்த்தமாக அவர்களது பெற்றோர், மற்றும் உறவினர்களால் 21 சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

இறந்தவர்களது ஆத்மசாந்திக்காக வைத்தியசாலை வளவில் அமைந்துள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட வழிபாடுகளும், பூசை ஆராதனைகளும் நடைபெறும்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையில் அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும்.

(ஐ-15)



கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல் நடுவதற்கு வந்த நெதர்லாந்து தூதுவர் பிளாங்கட்றை வரவேற்கும் முகமாக கல்லூரி அதிபர் திருமதி சுகுமார் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.
'நிக்கொட்' யாழ்.திட்டமுகாமையாளர் பொன்.நவரத்தினராசா, நெதர்லாந்து இரண்டாவது தூதுவர், 'நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் த.இலங்காநேசன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், டாக்டர் மயிலேறும்பெருமாள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# யாழ். கல்வி வலயமட்டத்திலான சைவநெறிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

யாழ்.கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவநெறிப் போட்டியில் வெற்றி பெற்றோரின் பெயர் விவரங்களின் முதலாவது தொகுதி நேற்றைய உதயனில் வெளியாகியது. அதன் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.

பேச்சு, தோரணம் பின்னுதல், கோலம் போடுதல், மாலை கட்டுதல், சமய அறிவு,எழுத்து பண்ணிசை மற்றும் சகலகலாவல்லி மாலை ஓதுதல் ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் முறையே வருமாறு:-

**சமய அறிவு - எழுத்து**

**தரம் - 03**

இ.சிவஸ்வரன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), ர.வராஜினி (கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), ரி.ஆத்மன் (சென். ஜோன்ஸ் கல்லூரி).

**தரம் - 04**

ச.ஸர்சன் (கல்வியங்காடு இ.த.க. பாடசாலை), அ.பானுசா (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), சி.வர்ஷன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

**தரம் - 05**

சி.மேகலாதன் (புனித ஜோன் பொஸ்கோ), இ.கஸ்தூரிராஜன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), ம.மதுஜீவிதன் (கல்வியங்காடு இ.த.க. பாடசாலை).

**தரம் - 06**

க.தினேஸ்ராஜன் (அத்தியார் இந்துக் கல்லூரி), யோ.துஷாந்தன் (ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரி), செ.குகன்யா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 07**

தி.தமயந்தி (கொக்குவில் ஸ்ரீஞானபண்டிதா வித்தியாலயம்), சி.நர்த்திகா (அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), இ.சோபிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 08**

ஜெ.ஜெனோதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ச.யசோதா (வேம்படி மகளிர் கல்லூரி), தி.லஸ்மியா (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி).

**தரம் - 09**

சி.கஜேந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ப.சுவர்ணா (வேம்படி மகளிர் கல்லூரி), ச.ஜனனி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தரம் - 10**

கோ.நிருஷிகா (வேம்படி மகளிர் கல்லூரி), இ.டல்ஷி (கொக்குவில் இந்துக் கல்லூரி), யோ.சுதர்சினி (திருக்குடும்பக் கன்னியர்மடம்).

**தரம் - 11**

த.திவாகரன் (யாழ். இந்துக் கல்லூரி), செ.ரெனீசியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சு.திசானா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**தரம் - 12**

ப.சாதுரியா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ந.சசிரேகா (வேம்படி மகளிர் கல்லூரி), தி.லக்ஸ்ஷனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**தரம் - 13**

சி.கிரிஜா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), சி.சிபாஜினி (வேம்படி மகளிர் கல்லூரி).

**பண்ணிசை**

**தரம் - 03**

தி.வருணியா (யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்.), உ.லக்ஷனா (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), சி.றெமினா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.).

**தரம் - 04**

சு.நாராயணி (யா/புனித ஜோன் பொஸ்கோ), தி.சிவசங்கர் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), ஜெ.மதூஷிகன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை).

**தரம் - 05**

கு.மயூரதி (யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ஸ்ரீ.திவ்வியா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), சி.சிவராம் (யா/புனித ஜோன் பொஸ்கோ).

**தரம் - 06**

ச.சேவிதா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), த.மதுரா (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), இ.ரஜீனா (யா/செங்குந்த இந்துக் கல்லூரி).

**தரம் - 07**

இ.அர்ஜுன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜோ.யுபேசன் (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), சி.மனோறோஸ் (யா/கனகரட்ணம் ம.ம.வி.).

**தரம் - 08**

சி.சமீரா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.), த.தர்மரூபன் (யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.), அ.றெஜினியா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

**தரம் - 09**

ஆர்.சுரசாகிந்தியன் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), தெ.பானுஜா (யா/வேம்படி மகளிர் உ.பா.), ச.ஜெயதரணி (யா/கொழும்புத்துறை இந்து ம.வி.).

**தரம் - 10**

ச.விஜயரூகஷாயினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செ.உஷாந்தி (கோண்டாவில் இந்து ம.வி.), இ.ஜெயகிருஷ்ணன் (யாழ். இந்துக் கல்லூரி).

**தரம் - 11**

சி.சிவதர்சிகா (யா/புனித மரியாள் வித்தி.), சி.நதியா (யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி), ம.கிஜானி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 12**

அ.அமிர்தலோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), இ.யசோதா (வேம்படி மகளிர் உ.பா.), தி.கமலலோஜினி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

**தரம் - 13**

த.காயத்திரி (வேம்படி மகளிர் உ.பா.), ஜெ.விஜயதீபன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி).

(வளரும்)

# கடத்தத் தயாரான நிலையிலிருந்த ஆயுதங்கள் ஏறாவூரில் மீட்பு!

ஏறாவூர்,ஒக்.20

ஏறாவூரில் இருந்து கடத்திச் செல்லத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத ஆயுதங்கள் சிலவற்றை ஏறாவூர் ரயில் நிலையத்தில் வைத்துப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து கொழும்பு செல்லவிருந்த புகையிரதத்தில் கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருந்த பொதியொன்றைச் சோதனையிட்ட போதே ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, மகஸின்கள்-02, ரவைகள்-46 என்பனவே கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் ஏறாவூர் மிச்நகர் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இந்த ஆயுதங்கள் ஏறாவூரில் இருந்து பொலன்னறுவை மாவட்டத்தில் கல்எல்ல பிரதேசத்திற்கு கடத்திச் செல்லப்படுவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தன என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

ஏறாவூர் பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற பல்வேறு கொலைச் சம்பவங்களுக்கும் இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்பது பொலீஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளன என ஏறாவூர் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஏ.எம்.சீரகல தெரிவித்தார்.

(க-8)

# வாசகர் திருமுகம்

## கோவளம் கிராமத்திலிருந்து ஒரு வாசகரின் கோரிக்கை

அனைத்து வசதிகளாலும் பின்தங்கிய காரைநகர் பிரதேசம் மீண்டும் புத்துயிர் பெற்று வரும் வேளையிலும் அப்பிரதேசத்தில் உள்ளடங்கியிருக்கும் கோவளம் கிராமம் அவ்வசதி களிலிருந்து புறக்கணிக்கப்படுவது ஏன்?

குறிப்பாக 2003 ஆம் ஆண்டில் 24 மணிநேர மின்சார வசதியை இலங்கை மின்சார சபை காரைநகர் பிரதேசத்திற்கு வழங்கியிருந்த போதும் அவ்வசதி தங்களுக்கும் வரும் என எதிர்பார்த்த கோவளம் கிராம மக்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஏமாற்றம் அடைந்த கிராம மக்கள் மீண்டும் மீண்டும் இலங்கை மின்சார சபைக்குப் பலமுறை வேண்டுதல்கள் விடுத்தும் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

கோவளம் கிராமத்தில் தொடர்ந்தும் மக்கள் மீளக்குடியேறி வரும் இவ்வேளை ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்விவரை கற்று வரும் மாணவர்கள் உள்ளடங்களாக அனைத்துத் தரப்பினரும் மின்சார வசதி இன்மையால் துன்புறுவதோடு, அண்மையில் களவுச் செயல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் அசமந்தப் போக்கைக் கைவிட்டு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*கோவளம், காரைநகர்.*

**ந.நவா.**

## ஓய்வூதிய மீளாய்வு ஒரு புரியாத புதிர்

1996 ஆம் ஆண்டுக்கு முன் அரச சேவையில்இருந்து ஓய்வுபெற்றவர்களின் ஓய்வூதியர்களில் உள்ள முரண்பாடுகளைச் சீர்செய்வதற்காக ஓய்வூதிய மீளாய்வு பிரதேச செயலகங்களில் ஓய்வூதியப்பகுதியால் மேற்கொள்ளப்படுவதை அனைவரும் அறிவர்.

ஆனால், இம்மீளாய்வுகள் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன என்பது புரியாத புதிராக இருக்கிறது. குறிப்பாக ஆசிரியர்களின் ஓய்வூதியம் பற்றிய விளக்கம் இல்லாமல் பல ஆசிரியர்கள் இருக்கின்றனர். இது பற்றி பிரதேச செயலகங்களில் போய் விசாரிக்கும் ஒவ்வொருவருக்கும் விளக்கம் கொடுக்க அங்குள்ள உத்தியோகத்தர்களால் முடியுமா? விளக்கங்களை எழுதி ஓய்வூதியப்பற்றுச்சீட்டுடன் இணைப்பதும் சாத்தியமில்லை. இவ்விடயம் பற்றி 04.10.2004 'உதயன்' கட்டுரையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விடயம் பற்றித் தெளிவானவிளக்கம் உள்ள எவராவது பத்திரிகையில் வெளியிட்டால் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் யாராவது முன்வருவார்களா?

*சண்டிலிப்பாய்.*

**ஓர் ஓய்வூதியர்.**

## காரைநகர் ஓய்வூதியரின் ஆதங்கம்

ஓய்வூதிய அதிகரிப்பு எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கும் கிடைத்து விட்ட இந்நிலையில், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களுக்கு இன்னமும் எட்டப்படாத ஒரு விடயமாகவே உள்ளது. இந்த அதிகரிப்பு வேலைகளை செய்யும் உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு காரணங்களைச் சொல்லிவருகின்றார்களே ஒழிய கொடுக்கப்படும் வழி இன்னமும் தென்படவில்லை. இதைப் பார்க்குமிடத்து மேலதிகாரிகளின் கவனிப்பற்ற தன்மையும், சரியாக செய்து முடிக்க அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இங்கு இல்லாத நிலையுமே இதற்கான் காரணங்கள் என எண்ணவேண்டியுள்ளது.

ஏனோ தானோ மனப்பான்மையை விட்டு உரியவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து 2004 ஒக்ரோபர் மாதத்திற்கு முன்பதாக இவற்றை ஓய்வூதியர்களுக்கு வழங்குவார்கள் என எதிர்பார்க்கலாமா?

*காரைநகர்*

**அ.நா.குழந்தைவேலு**
ஓய்வூதியர்.

## பிறந்தநாள் கொண்டாட்டங்கள் முன்மாதிரியாக அமையட்டும்!

ஓர் அந்தணரின் குழந்தைக்கு முறைப்படி ஹோமம் செய்யப்பட்டு- வேதம் ஓதப்பட்டு பிறந்தநாள்விழா கொண்டாடப்பட்டதை பத்திரிகையில் வாசித்து மகிழ்ந்தேன். இதனை அனைத்து அந்தணர்களும் செய்ய வேண்டும். வேதத்துடன் தேவார, திருவாசகங்களும் ஒலிக்கவேண்டும். எல்லோருமே பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது (மெழுகுதிரி) ஒளியை ஊதி அணைத்து கேக் வெட்டுகிறார்கள். ஒளியால் இறைவனுக்குப் பூசை செய்கின்றோம். விழாக்களிலே மங்கல விளக்கேற்றுகின்றோம். இப்படியிருக்க வளர்ந்துவரும் ஒரு பிள்ளை ஒளியை அணைப்பது எந்தவகையில் பொருந்தும்?

இணுவிலைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவர் மன்னாரில் வாழ்ந்த போது பிறமதத்தினரும் பாராட்டத்தக்கதாக தனது பிள்ளைகளின் பிறந்தநாள்விழாக்களில் பிள்ளைகளின் கையாலே தீபம் ஏற்றுவிப்பார். பிள்ளைக்கு எத்தனை வயதோ அத்தனை திரிகளை விளக்கில் இட்டு தீபம் ஏற்றுவிப்பார். கேக் வெட்டப்படுவதில்லை. தான் செய்ததை நண்பர்களையும் செய்ய வைத்தார்.

இந்துக்கள் எல்லோருமே தமது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஒளியை அணைக்காது கையிலே கத்தியை (ஆயுதத்தை) ஏந்தாது- ஒளியேற்றி இறை ஆசி பெறவேண்டும். இது கௌரவக்குறைவல்ல கௌரவ உயர்ச்சிக்குரியதாகும்.

*பொற்பதி வீதி, கொக்குவில்.*

**எஸ்.நாகேந்திரம்**

உதயன்

# பேச்சுக்கு முட்டுக்கட்டை பேரினவாதப் போக்கே!

"அமைதிப் பேச்சுக்களுக்கும் சமாதான முயற்சிகளுக்கும் தென்னிலங்கையில் பிரதான எதிர்க்கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் அபூர்வ நிலைமை இப்போது தோன்றியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தித் தாமதமின்றிப் பேச்சை உடன் ஆரம்பித்து முன்னெடுக்கும்படி இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேச சமூகமும் அதிகளவில் அழுத்தம் கொடுக்கவேண்டும்."

- இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹார்வே ஜ°வான் ஜின்னை பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் சந்தித்த சமயம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கோரியிருக்கின்றார்.

முன்னதாக பி.பி.ஸிக்குப் பேட்டியளித்த தமிழ்ச்செல்வன், சமாதான முயற்சிகள் தொடர்பாக இலங்கை அரசு முன்னுக்குப் பின் முரணான சமிக்ஞைகளை அனுப்புகின்றது எனத் தெரிவித்து அதற்காகக் கண்டனமும் வெளியிட்டிருந்தார். அதை ஊர்ஜிதப்படுத்துவது போலச் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவுக்குப் பதிலாக மாற்று யோசனை ஒன்றை அரசு தயாரித்திருக்கின்றது எனவும் -

அது விரைவில் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகப் புலிகளுக்கு அனுப்பப்படும் எனவும் -

அமைச்சரவைப் பேச்சாளரும் அரசுப் பேச்சாளருமான சிரேஷ்ட அமைச்சர் மங்கள சமரவீர அறிவிக்கின்றார்.

ஆனால், அத்தகைய யோசனை எதனையும் புலிகளின் தலைமை பரிசீலிக்கத் தயாரில்லை என்பது மங்களவின் அறிவிப்பு வெளியான கையோடு அறிவிக்கப் பட்டுவிட்டது.

எனினும், அரசின் மாற்று யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கப் புலிகள் தயார் என்ற சாரப்பட தென்னிலங்கையில் இருந்து அடித்து முழக்கிச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

அதேசமயம், லண்டனில் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தைச் சந்தித்த நோர்வே அனுசரணையாளர்களோ அரசின் மாற்று யோசனைகள் குறித்தோ, அப்படி ஒரு திட்டம் தயாராவது பற்றியோ தங்களுக்கு எதுவுமே தெரியாது; அவ்வாறு ஓர் ஏற்பாடு இல்லவே இல்லை எனக் கூறுகின்றனர்.

இப்படித் தமிழ்ச்செல்வன் கூறுவது போல அமைதி முயற்சி விடயத்தில் குழப்பமான சமிக்ஞைகளை வெளியிட்டு - தகவல்களை முன்வைத்து - நிலைமையைக் குட்டையைக் குழப்புவதுபோல, குழப்பியடிக்கிறது அரசுத்தரப்பு.

இதேசமயம், அமைதிப் பேச்சுக்களை எப்படியும் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை நேரில் வந்து செய்யுமாறு அனுசரணைத் தரப்பினரான நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரை இலங்கை ஜனாதிபதி கேட்டிருக்கின்றார் என்று தகவல் வெளியாகியிருக்கின்றது. இதை ஏற்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கை வருகின்றார்.

அவரது வருகையோடு அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான மற்றொரு சுற்று முயற்சியில், முழுவீச்சில் நோர்வே அனுசரணையாளர்கள் ஈடுபடுவர் எனத் தெரிகின்றது.

பேச்சை மீள ஆரம்பிக்கச் செய்வதற்கு நோர்வே எடுத்த பல சுற்று முயற்சிகளில், பத்தோடு பதினொன்றாக இதுவும் தோற்றுப்போகுமா அல்லது பேச்சுக்கள் இம்முறையாவது ஆரம்பிக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆனால், அப்படிப் பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பதாயின் தென்னிலங்கைச் சிங்களத் தரப்பிலிருந்து ஏகோபித்த முடிவுடனும் தீர்மானத்துடனும் அதிகாரத்துடனும் அரசுத் தரப்பு பேச்சுக்குத் தயாராக வரவேண்டும்.

தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருப்பது போன்று அத்தகைய முடிவுடன் அரசுத் தரப்பு பேச்சுக்கு வருவதற்கு பிரதான எதிர்க்கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் அபூர்வநிலைமை தென்னிலங்கையில் தோன்றியுள்ளது.

ஆனால், அரசுத் தரப்பு தனக்குள் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரும் நிலை உள்ளதா என்பதே கேள்வி. அமைதிப்பேச்சு முயற்சி ஆக்கபூர்வமான திசையில் நகருவதற்கும் தடைக்கல் இதுதான்.

சிங்கள, பௌத்த பேரினவாதிகளையும், தீவிரவாதிகளையும் கூட்டுச் சேர்த்திருக்கும் இந்த அரசு, அந்தப் பேரினவாதிகளின் பிடியிலிருந்து விடுபட்டு - தன்னை விடுவித்துக்கொண்டு - வெளியே வந்து, சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் நிலைமை தோன்றும் வரை அமைதிப் பேச்சுக்கள் சாத்தியமற்றவை என்பது நிச்சயம்; நோர்வே வெளிவிவகார அமைச்சர் என்ன, நோர்வே பிரதமர் என்ன, சர்வதேச சமூகம் முழுமையாகத் திரண்டு வந்தாலும்கூட அரசுத் தலைமையிடம் ஏகோபித்த முடிவு வராமல், பேச்சுக்கு இடமேயில்லை.

# பல்கலை. அனுமதி பெறாத மாணவருக்கான தொழில்சார் வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக்.20

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் எதிர்கால வாழ்க்கையை எந்த வகையில் அமைக்கலாம் என்பதற்கு வழிகாட்டும் நோக்குடன் தொழில்சார் பயிற்சிப்பட்டறை இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் இன்று காலை 8 மணி முதல் இந்தப்பட்டறை இடம் பெறும்.

பல்கலைக்கழக அனுமதி பெறாமல் உள்ளவர்கள் எந்தவகையான தொழிற் பயிற்சியைத் தெரிவு செய்து எதிர்காலத்தை வளமாக்கலாம் என்பது குறித்து மாணவர்களுக்கு விளக்கும் நோக்குடன் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் 306 பி பிராந்தியம் 10, வலயம் 2 இற்கு உட்பட்ட லயன்ஸ் கழகங்கள் இந்தப்பட்டறையை ஒழுங்குசெய்துள்ளன.

இலவசமாக நடத்தப்படும் இந்தப்பட்டறையில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக தொழில்சார் வழிகாட்டல் பிரிவுப் பணிப்பாளர் பேராசிரியர் என்.ஞானகுமாரன், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி உப அதிபர் எம்.அலோசியஸ், விரிவுரையாளர் வி.சத்தியானந்தன், யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன விரிவுரையாளர்களான கே.கதிரவேலு, ஆர்.திலகரட்ணம், யாழ்.திறந்த பல்கலைக் கழக பிராந்திய முகாமையாளர் எஸ். ஞானேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

இந்தப் பட்டறையில் பங்குபற்றி தொழில் பயிற்சி ஒன்றைத் தெரிவு செய்து எதிர் காலத்தை வளமாக்க மாணவ மாணவிகளை வருமாறு வலயத் தலைவர் வி.எஸ்.சொக்கலிங்கம் கேட்டுள்ளார். (8-3)

### சமாதானப் பேச்சுக்குத் திரும்ப இரு தரப்பையும் வலியுறுத்த

# கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் குழு வருட இறுதியில் இலங்கைக்கு வரும்

கனேடிய நடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும், வர்த்தகப் பிரமுகர்கள் குழுவொன்றும் இந்த வருட இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளன.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரையும் வலியுறுத்தும் முகமாகக் கனேடியத் தூதுக்குழுவின் இந்தப் பயணம் அமையவுள்ளதாக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மின்னா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்முடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து கடந்த சனிக்கிழமை கனடாவின் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் மரியா மின்னா இவ்வாறு கூறினார்.

இலங்கை செல்லவுள்ள குழுவில் கனடாவின் தேசிய அளவிலான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் இடம் பெறுவார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதுடன், பொருளாதார வகையில் வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்தமுடியும் என்பது குறித்து, தமது இந்தப் பயணத்தின்போது கலந்துரையாடவுள்ளனர் எனவும் மரியா மின்னா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது பயணத்தின் போது இருதரப்பையும் சந்திப்பதற்குத் தான் தயாராகவுள்ளார் எனவும் தெரிவித்துள்ள மரியா மின்னா, கடந்த தடவை கனடாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பில் கிரகாம் இலங்கைக்குச் சென்றபோது, விடுதலைப் புலிகள் தரப்பைச் சந்திக்காதது போல இம்முறை தான் செய்யப்போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளையும் அரச தரப்புப் பிரதிநிதிகளையும் சந்திக்காது விட்டால் இந்த விஜயத்தில் எந்தவித அர்த்தமும் இல்லை எனவும் கூறிய அவர், இரு தரப்பினரையும் சந்திப்பதில் எந்தவிதத் தடையும் இருக்கும் எனத் தான் நம்பவில்லை எனவும் கூறினார். இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த மரியா மின்னா, இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கனடா எப்போதும் உரிய உதவிகளை வழங்கும் எனவும் உறுதியளித்துள்ளார் (க-8)

# இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கு ஐந்து இடங்களில் நாளை முதல் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.20

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச திணைக்களங்களில் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாம் தொகுதி பட்டதாரிகளுக்கான ஆரம்ப நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை ஐந்து இடங்களில் இடம்பெறவுள்ளன.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வுகள் 5 இடங்களில் நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

வடமராட்சியைச் சேர்ந்தவர்களுக்கான நிகழ்வு கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.சண்முகரட்ணம் தலைமையிலும், யாழ்ப்பாணம், தீவகம் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கான நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையிலும் -

கோப்பாயைச் சேர்ந்தவர்களுக்கான நிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையிலும் -

வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையிலும் -

தென்மராட்சியைச் சேர்ந்தவர்களுக்கான நிகழ்வு கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்ஸ்ரீநிவாசன் தலைமையிலும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பங்குபற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 647 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலரினால் தனித்தனியாக அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-202-203)

# தனிமையில் இருந்த பெண்ணிடம் நகை திருடியவர் வகையாகச் சிக்கினார்

யாழ்ப்பாணம்,ஒக்.20

உரும்பிராயில், வீட்டில் தனிமையில் இருநத பெண்ணிடம் நகைகளைத் திருடிய நபர் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் வீட்டில் தனியாக இருந்த பெண்மணியைச் சைக்கிளில் வந்த இருவர் மிரட்டி அவரிடம் இருந்து சங்கிலி மற்றும் காப்பை அபகரித்துக் கொண்டு தப்பி ஓடினர்.

அந்தப்பெண்மணி எழுப்பிய கூக்குரலை அடுத்து அங்கு கூடிய பொதுமக்கள் இருவரையும் துரத்திச் சென்றனர். ஒருவர் வகையாக மாட்டிக் கொண்டார். மற்ற நபர் கத்தியைக்காட்டி மிரட்டி விட்டுத் தப்பி ஓடிவிட்டார்.

பொதுமக்களால் பிடிக்கப்பட்ட நபர் மரம் ஒன்றில் கட்டி வைக்கப்பட்டார்.

அச்சமயம் அந்த வழி ஊடாக வந்த கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் பிரஸ்தாப நபரைக் கைது செய்து பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றார்.

தப்பி ஓடிய நபரைத் தேடிப் பொலீஸார் வலைவிரித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். (8-3)

# ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி மாணவர், ஆசிரியர்களிடையே போட்டிகள்

ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலய மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இம்மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

தரம்10, தரம்11 மாணவர்களிடையே ஐக்கிய நாடுகள் சபை தொடர்பான பொது அறிவு வினாடி வினாப் போட்டியும், ஆசிரியர்களிடையே பட்டிமன்றப் போட்டியும் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபிக்கப்பட்டமை பொதுமக்களுக்கு நன்மையா? தீமையா? என்னும் தலைப்பில் ஆசிரியர்களுக்கிடையில் பட்டிமன்றப் போட்டி நடத்தப்படுமெனவும்,போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுமெனவும் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் தெரிவித்தார். (8-117)

## நாளை

ஐப்பசி 05
வியாழக்கிழமை
(21.10.2004)
திதி: அட்டமி
மாலை 5.02 வரை.
நட்சத்திரம் : உத்தராடம்
பிற்பகல் 4.45 வரை
சுபநேரம் : 07.32 - 09.02
ராகுகாலம் : 1.32 - 03.02
(பழைய நேரப்படி)

# கைதடியில் மண் அகழ்ந்தபோது மனித எலும்புக்கூடு கண்டுபிடிப்பு?

கைதடி,ஒக்.20

மண் அகழ்ந்தபோது வெளியே வந்த மனித எம்புக்கூடு ஒன்று இரகசியமான முறையில் அப்புறப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் அண்மையில் நாவற்குழி ஆயிலியப்பிட்டி என்னும் இடத்தில் இடம்பெற்றிருக்கிறது.

இங்குள்ள வீதி ஒன்றைத் திருத்துவதற்காக ஒப்பந்த அடிப்படையில் மணல் வழங்கிக் கொண்டிருந்த சிலர், அன்றைய தினம் இப்பிரதேசத்தில் மண்ணை வெட்டிக் கொண்டிருந்தனர் என்றும் -

அவ்வேளை எலும்புக்கூடு ஒன்று கிழக்கு மேற்குப் பக்கமாக புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள. உடனடியாக அதனை வெளியே எடுத்துவிட்டு தமது ஒப்பந்தக்காரர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இந்த மனித எலும்புக்கூடு பற்றிய தகவல் உரிய தரப்புக்களுக்கு அறிவிக்கப் படாமலே அது அங்கிருந்த அகற்றப்பட்டு விட்டது என்று சொல்லப்படுகிறது.

குறிப்பிட்ட மனித எலும்புக்கூடு மண்ணில் ஆழம் குறைந்த பகுதியில் புதையுண்டு காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட எலும்புக்கூடு 1996-97 காலப் பகுதியில் ராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன ஒருவருடையதாக இருக்கலாம் எனவும் சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது. இப்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்தே இராணுவத்தினர், கைது செய்த இளைஞர்களைச் சித்திரவதை செய்தனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (ஐ-75)

## உதயவாக்கு

எவர்கள் எதை எளிதிற் பெறுகின்றார்களோ, அவர்கள் அதிற் செருக்குடையவராவார்கள்.

# ஊடக அலுவலகத்தின் முன்னால் ஞாயிறு இரவு குண்டுவீச்சு!

## கண்டிக்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஒக்.20

கொள்ளுப்பிட்டியில் உள்ள சுவர்ணவாஹினி தொலைக் காட்சி நிலையத்துக்கு முன்னால் கடந்த ஞாயிறன்று இரவு இனம்தெரியாத நபர்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்கு தலை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் மோட்டார் சைக்கிளொன்றில் வந்த நபர்கள் கொள்ளுப் பிட்டியில் உள்ள சுவர்ணவாஹினித் தொலைக் காட்சி நிலையத்திற்கு முன்னால் உள்ள வாயிற் கதவருகே கைக்குண்டொன்றை வீசி வெடிக்க வைத்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். இந்தக் குண்டு வெடிப்பால் பெரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த திஸ்ஸ அத்தநாயக்க, தனியார் ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றிற்கு அச்சுறுத்தல் விடுப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். சுதந்திரமாக ஊடகங்கள் செயற்படுவதைத் தாங்கிக் கொள்ளமுடியாத சக்திகளே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இச்செயலை எமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்த ஊடக விரோத சக்திகளைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்றும் கோருகின்றது - என்றார் அவர்.

(சு-8)


மிருசுவிலைச் சேர்ந்த
யேசுதாசன் - சகாயராணி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

செல்வன் டொரிசியன்

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (20.10.2004) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், அன்ரா, அங்கிள், மச்சான்மார், மச்சாள்மார், சுவிஸில் வசிக்கும் தொட்டப்பா, தொட்டம்மா, மாமா, மச்சான் மற்றும் அக்காமார், அண்ணா, தங்கை, உற்றார், உறவினர் அனைவரும் மிருசுவில் புனித நீக்கிலாரின் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
செல்வரத்தினம்
அம்மப்பா,
ஜெபா (ஆசைமாமா).
கண்டி வீதி,
மிருசுவில்.
(37750) (34-13-44-24)



மனமுவந்து பாராட்டுகின்றோம்



அளவெட்டியைச் சேர்ந்தவர்களான
சிவசுப்பிரமணியம் - சாந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வி

செல்வி ருவல்யா

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி பயின்று 2004 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சையில் 143 புள்ளிகளைப் பெற்று கல்லூரியில் முதலாமிடத்தில் சித்தியடைந்தமை குறித்து அவரை அப்பம்மா, பெரியப்பாமார் (ஜேர்மனி, சுவிஸ்) பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார் மற்றும் அப்பப்பா முருகேசு ஆகியோர் தமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றார்கள்.

அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.
(37770)(39-13-44-24)
தகவல்:
அத்தை ரேவதி.



காமாக்ஷி அம்பாள் துணை
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

20.10.2004



ஜேர்மனியில் வசிக்கும்
(யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த)
ம.சிவானந்தன் – அனுசியா தம்பதிகளின்
செல்வப் புதல்வி

செல்வி கஷானிகா

இன்று (20.10.2004) புதன்கிழமை
தனது முதலாவது பிறந்தநாளை
பெற்றோர், உறவினர், நண்பர்கள் சகிதம்
தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

கஷானிகா

கஜானிச் செல்வத்தை "வாழ்வினைச்
செழுமையாக்க வந்தவளே, வம்சம்
தழைக்க வந்தவளே! விநாயகர்
அருளால் கிடைத்த இனியவளே என்றும்
நீ காமாக்ஷி அம்பாள் அருளால்
சகல ஐஸ்வரியங்களுடன் பல்கலைகளும்
கற்றுச் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம்
நலமுடன் வாழ்க வாழ்கவென அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா,
அப்பம்மா, பூட்டியம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார்
ஆகியோர் இதயம் மகிழவாழ்த்துகின்றார்கள்.

555, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

பெரியமாமா த.தீபன்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் கிருஷாந்
(யா/இந்து ஆரம்ப பாடசாலை)



செல்வன் நிலக்ஷன்
(யா/பெரியபுலம் ம.வித்தி.)

சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி குணானந்தசீலன் - சகுந்தலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் செல்வன் நிலக்ஷன் (யா/பெரியபுலம் ம.வி.) 2004 ஆம் ஆண்டு 5 ஆம் தரப்புலமைப் பரிசிற் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். திரு. திருமதி திருச்செல்வம் - கமலகுமாரி தம்பதியரின் செல்வப் புதல்வன் செல்வன் கிருஷாந் 131 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இவர்கள் இருவரையும் பாராட்டுவதோடு, செல்வன் நிலக்ஷனின் 10 ஆவது பிறந்த நாளாகிய இன்று அவரை மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

இவர்களுக்கு அறிவூட்டி, நெறிப்படுத்திய ஞானக்குழந்தை கல்விக்கழக அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்ச்சியடைகின்றோம்.

14, துரைராஜா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(37754)(34-13-44-24)
- குடும்பத்தினர்.
- அம்மம்மா.





"தீபாவளி" பண்டிகையை முன்னிட்டு

16.10.2004 முதல் 11.11.2004 வரைக்கும்
நீங்கள் கொள்வனவு செய்யும் பொருள்கள்
அனைத்துக்கும்
விசேட கழிவு உண்டு!

லலடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.(பஸ் நிலையம் முன்பாக) ☎ 222-2381
(C/3827)



முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

20-10-2004




ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தர்மசீலன்-சுதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான மதுசாந் - கபிசாந் இருவரும் தமது முதலாவது பிறந்ததினத்தை இன்று (20.10.2004) புதன்கிழமை ஊரெழு கிழக்கிலுள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றனர். இவர்களை அன்பு அப்பா,அம்மா,அம்மப்பா,அம்மம்மா, அப்பப்பா,அப்பம்மா, பூட்டி, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஊரெழு கிழக்கு ஞானவைரவர் அருள் பெற்று பல்கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:
ஐ.மகேந்திரன் [அம்மப்பா], ஊரெழு கிழக்கு

வாணி ராண்ஸ் போட். T.P.0777-732561.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் 2004.10.09 அன்று நடைபெற்ற தேசியநிலை தமிழ்மொழித் தினப்போட்டியில் பிரிவு I தனிநடனம் நிகழ்வில் இரண்டாம் இடம் பெற்ற செல்வி சரவண்யா தெட்சணாமூர்த்தி அவர்களையும்,



மாவட்ட மட்டத்தில் பிரிவு I இசையும் அசைவும் நிகழ்வில் முதலாம் இடம் பெற்ற செல்வி ஸ்ரீதரா வரதராஜா அவர்களையும் வழிப்படுத்திய அதிபர், நெறிப்படுத்திய ஆசிரியர்கள் திருமதி ஜெ.இளங்கீரன, செல்வி கி.கலையமுதா மற்றும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
(37759)
(34-13-44-24)

# புலம்பெயர்ந்த நாட்டில் புகழ் பெற்ற நான்கு மாணவிகளின் நடன சங்கமம்

அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற சுவிற்ஸர்லாந்து கலாநிகேதன் நடனாலய மாணவிகள் வழங்கிய "நாட்டியாஞ்சலி" நிகழ்வின் தொகுப்பு இது.

தமிழீழத் தாயக மண், இரண்டு வருட யுத்தநிறுத்த காலத்தில் புலம்பெயர்ந்து போன உறவுகளை அழைத்து இப்போது மகிழ்ந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் வெளி நாட்டில் இருந்து வந்த எமது சொந்தங்கள் காலாற நடந்து இன, சன பந்தங்களின வாசல்களைத் தேடி மறந்துபோன முகங்களை மீண்டும் ஒரு தடவை பார்த்து மகிழ்வுறுகின்றனர்.

பாச உறவை, நட்பின் பாலத்தை புதுப்பித்



துக் கொள்கின்றனர். இத்தனைக்கும் யுத்தமொன்றே காரணம். பாரிய யுத்தம், இடப்பெயர்வு என்பனவற்றுக்கு முகம் கொடுத்து இங்கிருந்து வாழ்ந்த மக்கள் தங்களுக்கென்ற தனிப்பெருமையை அவர்களிடம் விட்டுக் கொடுக்கத் தவறவில்லை.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் நம்மவர்கள் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தாலும் யாழ்ப்பாண மண்ணின் மணமும், குணமும் அவர்களிடத்தில் இருந்து இன்னும் விடுபடவில்லை. அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற "நாட்டியாஞ்சலி" நிகழ்வு இதற்கு நல்லதொரு சான்று.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில பரதநாட்டியத்தில் டிப்ளோமா முடித்து நாட்டியக கலைமாணிப்பட்டம் பெற்றவர் திருமதி கிருஷ்ண பவானி ஸ்ரீதரன். இவர் புலம்பெயர்ந்து சுவிற்ஸர்லாந்து சென்று அங்கு கலாநிகேதன் நடனாலய பள்ளி ஒன்றை அமைத்து அங்கு வாழும் எமது தமிழ் மாணவர்களுக்குப் பரதத்தை முறைப்படி கற்பித்து வருகின்றார்.

இவரிடம் பரதம் பயின்ற மாணவிகள் நால்வரது நடனசங்கம நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நல்லதொரு கலை விருந்தாக நம்மவர்களுக்கு அமைந்தது.

எமது கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் இன்னமும் சாகவில்லை. மாறாக நம்மவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் அது வாழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை சுவிற்ஸர்லாந்து மாணவிகள் நால்வரது நடனக்கோலங்கள் எடுத்துக்காட்டின.

நடன நிகழ்வில் தீபா துரைசிங்கம், நிருஜா ஸ்ரீபாஸ்கரன், தர்ஷிகா சுந்தரலிங்கம், காயத்திரி ஸ்ரீதரன் ஆகிய மாணவிகள் பங்கேற்றனர்.

வஸந்த என்ற இராகமும் மிஸ்ரசாபு என்ற தாளத்திலும் அமைந்த புஸ்பாஞ்சலி நாட்டியத்துடன் அரங்க நிகழ்வு ஆரம்பமாகியது. புஸ்பாஞ்சலி நாட்டியத்திற்கு நான்கு மாணவர்களும் பங்கேற்றனர். இந்த முதல் உருப்படி நிகழ்வில் கைதட்டல் ஒலி நாட்டிய மாணவர்களுக்கு உற்சாகமளித்தது.

**தொகுப்பு : சுயர்சன்**

அடுத்து ஸ்ரீரஞ்சினி இராகம், ஆதிதாளத்தில் அமைந்த விநாயகர் ஸ்துதியும், முரளீதர கௌத்துவமும் இடம்பெற்றது.

நான்காவது உருப்படியாக அமைந்த தர்மாவதி, ஆதி முறையே இராக தாளத்தில் அமைந்த வர்ணம் இடம்பெற்றது.


இந்த நாட்டியத்திற்கு கலாநிகேதன் நடனாலய ஆசிரியையிடம் பயின்று இந்த வருடத்திற்கான சுவிற்ஸர்லாந்தின் 'நாட்டிய மயில்' எனும் விருதினைப் பெற்ற மாணவி சிறப்பாக ஆடல் புரிந்தார்.

இந்த நாட்டியாஞ்சலி நிகழ்வுக்கு மேலும் மேலும் மெருகூட்டியது இந்த நடனம்தான். சபையில் இருந்தவர்களை தனது நாட்டியத் திறமையினால் மாணவி கவர்ந்தார். இந்த வர்ணம் என்ற நிகழ்வின் இறுதியில் ரசிகர்களது பலத்த கரகோஷம் மாணவிக்கு பாராட்டாகக் கிடைத்தது.



நிகழ்வின் இடையில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய பரதக்கலைஞர் சாகீர் உசைன் மாணவியின நடனத் திறனைக் கண்டு வியந்து பாராட்டினார். தொடர்ந்து ஆடினயே கண்ணா, சிவன் தாண்டவம், தசாவதாரம், தில்லானா, அம்மன் ஸ்துதி என்ற உருப்படி வரை நடன நிகழ்வு தொடர்ந்தது.

நாட்டிய வேள், 'கலைஞர்' வேல் ஆனந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு



முதன்மை விருந்தினராக இந்திய பரதக்கலைஞர் சாகீர் உசைன், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய ஆடற்கல்வி ஆலோசகர் திருமதி பத்மினிதெய்வேந்திரகுமார், யாழ்.பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் திருமதி கிருஷாந்தி இரவீந்திரா, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நடனத்துறை விரிவுரையாளரும் ஆலோசகருமான திருமதி சாந்தினி சிவனேசன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் லயஞானவாரிதி சின்னத்துரை மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நாட்டியாஞ்சலி நிகழ்வுக்கு அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம், நடன அமைப்பை நாட்டியக்கலைமணி திருமதி கிருஷ்ணபவானி ஸ்ரீதரனும், குரலிசையை சங்கீத கலாவித்தகர் வைத்திலிங்கம் கணேசலிங்கமும், வயலின இசையை இசைக் கலைமணி சண்முகநாதன் திபாகரனும் மிருதங்க இசையை மகேந்திரன் லோகேந்திரனும் வழங்கினர். ★




# தமிழ்ப் பாரம்பரிய கலைகளை வெளிப்படுத்திய முத்தமிழ் விழா

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி தமிழ் மன்றத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட முத்தமிழ் விழா எமது தமிழ்மொழியையும், அதுபேணுகின்ற பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களையும், ஒழுக்க நெறிகளையும் மீண்



டும் ஒரு தடவை நம்முன்கொண்டுவந்து நினைவுபடுத்தியுள்ளது.

தமிழரின் பாரம்பரிய கலைகளை ரசிப்பதற்கும் தமிழையும் அதன் பாரம்பரியங்களையும் பேணி வளர்க்கவும் என மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த முத்தமிழ் விழாவைக் கண்டு மகிழவும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

விழாவினுடைய ஆரம்பமே முத்தமிழ் விழாவின் நோக்கத்தையும், எமது தமிழ்ப் பாரம்பரியத்தைப் பின்பற்றிவரும் இலக்கையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.

பார்ப்போரின் மனதை நெகிழச் செய்த நிகழ்வாகவும் அமைந்திருந்தது.

கல்லூரி வாசலில் இருந்து விழா நடைபெற்ற ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்துக்கு பிரமுகர்களையும் பார்வையாளர்களையும் அழைத்துச்சென்ற காட்சி மனதை பரவசமூட்டியது.

தமிழ்ப் பண்பாட்டுக் கலாசாரங்களை வெளிப்படுத்திக் காட்டும் தீப்பந்த விளையாட்டுக்கள் முதலாக கோலாட்டம், கும்பிநடனம் ஆகியவற்றுடன் கன்னியர்கள் மங்கள விளக்குகளை வரிசையாக ஏந்திச் சென்ற காட்சிகள் சிறப்பாக அமைந்தன.

தமிழ் வளர்த்த பெரியோர்களான ஆறுமுக நாவலர், விபுலானந்தர், ஔவையார், திருவள்ளுவர், பாரதியார் போன்ற அறிஞர்களை நினைவுபடுத்தி அவர்களைப் போன்று கோல உடை தரித்த மாணவர்கள் முன் செல்ல, அலங்கரிக்கப்பட்ட நீண்ட பந்தலினூடாக பிரமுகர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

உலக அரங்கிலே தமிழர்கள் எத்தனையோ சாதனைகள் படைத்து வந்தாலும் கூட தமிழ் மொழி பற்றிய அச்சம் இன்று வலுவடைந்து கொண்டே வருகிறது.

**நிறைமுனைவன்**

"செந்தமிழ் நாடென்றும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே.." என உரக்கப் பாடிய பாரதியார் வாழ்ந்த பாரததேச தமிழ்நாட்டிலே இன்று தமிழுக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளது. சுத்தமான தமிழைக்காண முடியவில்லை. வேற்று மொழி கலந்த தமிழே உச்சரிக்கப்படுகின்றது.

முத்தமிழ் விழாவிலே இடம்பெற்ற சுதி லயத்துடன் அமைந்த ஆடல் நிகழ்ச்சிகள், ராக தாளங்களுடன் கூடிய பாடல்கள், வீரம் செறிந்த உணர்ச்சிகரமான நடிப்புப் போன்றவை அவற்றுக்குரிய கோல உடைகளுடன் அரங்கேறி இருந்தன.

ஓர் இனத்தினை அடையாளப்படுத்துகின்ற குறிகாட்டிகளுள் முதன்மையானது மொழியாகும். இந்த அடையாளத்தை இழப்பதன் மூலம் இனத்தையே இழக்கநேரிடுகின்றது. பாரம்பரிய கலைகள், விளையாட்டுக்கள், உணவு முறைகள், பழக்கவழக்கங்கள் எல்லாம் கூட ஓர்



இனத்தை அடையாளப்படுத்தும் குறிகாட்டிகளே.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் நடத்திய முத்தமிழ் விழாவில் தமிழ் இனத்தின் அடையாளக் குறிகாட்டிகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

பெற்றோர்கள் தம்பிள்ளைகளுக்கு தமிழில் - தமிழ்ப்பெயர்களைச் சூட்ட கூச்சப்படுகின்றனர்; சுத்தமான தமிழை உச்சரிக்க வெட்கப்படுகின்றார்கள். ஆங்கிலம் கலந்து பேசுவது தான் பெருமை எனக் கருதுகின்றனர்.

பெற்றோர்களும் பிள்ளைகளும் இத்தகைய நிலைப்பாடுகளில் இருந்து விடுபடவேண்டும். சுத்தமான தமிழ் வார்த்தைகளை உச்சரிக்கவும், தமிழ்மொழிப்பற்றோடு கூடிய தமிழ்ப்பெயர்களைச் சூட்டவும் எமது பண்பாட்டுக் கலாசாரங்கள் பேணிப் பாதுகாக்கப்படவும் இது போன்ற முத்தமிழ் விழாக்கள் வழிவகுக்கும்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் முத்தமிழ் விழாக்களை ஆசிரியர்களும், கல்விப்புலத்தினரும் ஒழுங்கு செய்வது அவர்களின் முதற்பணியாக அமையவேண்டும். ★

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் சபிண்டிகரண அழைப்பும்

தோற்றம்
17 - 02 - 1921



மறைவு
20 - 09 - 2004

## அமரர் சின்னையா சண்முகநாதன்

எமது குடும்பத்தின் குலவிளக்காகத் திகழ்ந்து - எம் வாழ்வைப் பிரகாசிக்கச் செய்த எங்கள் அன்புத் தெய்வமே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

20.09.2004 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தும், எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

இன்று (20.10.2004) புதன்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்துக் கல்லூரி ஒழுங்கை,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

முன்னைய வதிவிடம்:
*பன்குளம், திருமலை.*

- குடும்பத்தினர்.

(37556)(39-18-46-24)

# ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க முடிவு

வளலாய்,ஒக்.20

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவில் சுகாதார வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அற்றநிலையில் உள்ள சிறுப்பிட்டி மேற்குக் கிராம சேவகர் பிரிவிலும், ஊரெழு கிராம சேகவர் பிரிவிலும் மேற்படி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (8-178)

# மானிய விலையில் தென்னங்கன்றுகள்

வட்டுக்கோட்டை,ஒக்.20

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தித் திட்டத்தின்கீழ் மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டின்கீழ் உள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு மூன்று வருடத்தில் பயன் தரக்கூடிய நல்லின தென்னங்கன்றுகள் சமுர்த்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. (8-161)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 1,500 கோடி ரூபா கடன் உதவி

கொழும்பு,ஒக்.20

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இலகு நிபந்தனைகளின் அடிப்படையில் 1,500 கோடி ரூபாவை இந்தியா கடனாக வழங்கவுள்ளது. இது சம்பந்தமான ஒப்பந்தம் மும்பாயில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

குறைந்த வட்டியுடன் கூடிய இந்தக் கடனை 7 வருட காலத்தில் இலங்கை திரும்பச் செலுத்த வேண்டும். இதுகுறித்துப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் காலிய மெதகம தெரிவிக்கையில்:

இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட பேச்சுக்களை அடுத்து இந்தக் கடன் உதவி கிடைத்திருக்கிறது. விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் பெற்றோலியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். பெற்றோலியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக இலங்கை வருடமொன்றுக்குப் பத்தாயிரம் கோடி ரூபாவுக்கு மேல் செலவிடுகிறது - என்றார். (க-8)


## டிஜிட்டல் அல்பம் தயாரித்தல்!!!

டிஜிட்டல் இமேஜ், பிளைமவுண்ட் பிறேமிங், கூல், டியூரோ, அல்ப லமினேசன் வேலைகள் அவசர தேவைக்கான அல்ப வேலைகள் குறித்த நாளில் செய்து வழங்குகின்றோம்.
யாழ் ஒளி வீடியோ புகைப்பட சேவை

**K.S.R. PHOTOS**

*இல. 05, கனகபுரம்தெரு, கிளிநொச்சி,*
T.P.: 021 228 5001

776, K.K.S. *வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.*
T.P.: 0214590609

(37738)(39-18-46-24)


## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்

# முக்கிய அறிவித்தல்

★ வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர் பட்டியல்

சங்கத்தின் வாக்காளர் இடாப்பு உப விதிக்கு அமைய 30.09.2004 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டு கிளைகளில் வாக்காளர் பட்டியல் பார்வைக்காகத் தொங்கவிடப்பட்டுள்ளது. எழுதுமட்டுவாழ் கிளை தனியான இடத்தில் இயங்காமையால் அக்கிளையின் பட்டியலைப் பார்வையிட விரும்புவோர் கடமை நேரத்தில் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

வ.ந.வல்லிபுரம்
தலைவர்.
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.
19.10.2004

சு.சண்முகம்
செயலாளர்.

(சி-38287)(34-19-15-24)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்*
04 - 09 - 1972



*மறைவு*
11 - 10 - 1994

## அமரர் ஆறுமுகம் கிருபாகரன்

*திதி*:20.10.2004

ஆண்டுகள் பத்தும் பறந்தோடிப் போயினவே!
மீண்டும் ஒருமுறை உம் முகம் காட்டிரோ?
உமையிழந்த கவலையினால் தினமும் கலங்குகின்றோம்
இன்று உம்மை நினைந்து அஞ்சலி செய்கின்றோம்!

*அண்ணா வீதி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

- குடும்பத்தினர்.

(37747)(42-18-44-24)

# யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின்

# இணைந்த புலமைப்பரிசில்

## (மூன்றாவது வழங்கல் 2004/2005)

யாழ். மத்திய கல்லூரியில் பயிலும் திறமைமிக்க வசதி தேவைப்படும் மாணவர்கள் இலங்கையில் தங்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான நிதி உதவியினை வழங்குவதற்கான கொழும்பு, கனடா, ஆஸ்திரேலியா, யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களும், யூ.கே. பழைய மாணவ, மாணவிகள் சங்கமும் இணைந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மூன்றாவது ஆண்டுக்கான விளம்பரம்.

- ✦ இந்த உத்தேசத்திட்டத்தின் கீழ் க.பொ.த. (உயர்தரம் ஆண்டு 12, 13) வகுப்புகளில் கற்கும் ஏறக்குறைய 20 தகைமை வாய்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுதோறும் தலா ரூபா 5,000.00 வீதம் வழங்கப்படும். இதேபோன்று தேசியப் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரும் ஏறக்குறைய 10 தகைமை வாய்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுதோறும் ரூபா 10,000.00 வீதம் வழங்கப்படும். (இத்தெரிவு கடைசியாக நடைபெற்ற உட்செல்லும் தேர்வின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும்).

## பொதுத் தேவைப்பாடுகளும் நிபந்தனைகளும்

- ✦ தற்பொழுது (உ/த) வகுப்புகளில் (12ஆம், 13ஆம்) தரங்களில் பயிலும் மாணவர்களும், கடந்த பல்கலைக்கழகத் தேர்வில் சித்தியெய்தியவர்களும், இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் செய்வதற்கு உரியவர் ஆவார்.
- ✦ குடும்பத்தின் கூட்டுவருமானம் ஆண்டொன்றுக்கு ரூபா 90,000.00 இற்கு மேற்படலாகாது.
- ✦ பெற்றோரை இழந்த, உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கும், விளையாட்டிலும் பாடசாலை கல்வி விதானத் திட்டத்திற்கு மேற்பட்ட செயற்பாடுகளில் சிறந்து விளங்கும் தகைமைபெற்ற மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- ✦ பரீட்சைப் பெறுபேறுகள், பாடநெறி தெரிவு முன்னுரிமை என்பன தொடர்பில் பாடசாலை அதிபரின் விதப்புரையும், தனிப்பட்ட விவரங்கள், குடும்பவருமானம் என்பவற்றின் உறுதிப்படுத்தலுக்குக் கிராம சேவையாளரின் அத்தாட்சிப்படுத்தலும் தேவைப்படும்.
- ✦ விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபரிடமும் யாழ். மத்திய கல்லூரி, பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை, கௌரவ புலமைப்பரிசில் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். சுய விலாசமிடப்பட்ட மேலுறைகளை அனுப்பிவைத்தால் விண்ணப்பங்கள் அனுப்பப்படும்.
- ✦ நிதியுதவி பெறுவோரைத் தெரிந்தெடுத்தலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதலும் புலமைப்பரிசில் முகாமைக்குழுவின் பொறுப்பாக அமையும். இப்புலமைப்பரிசில் திட்டம் தொடர்பிலான சகல விடயங்கள் பற்றி, இக்குழு எடுக்கும் தீர்மானங்கள் முற்றானதும் இறுதியானதுமாகக் கருதப்படும்.
- ✦ இப்புலமைப் பரிசில்களைப் பெறவிரும்பும் தகைமையைப்பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விண்ணப்பங்களும் "*கௌரவ புலமைப்பரிசில் செயலாளர், யா.ம.க.ப.மா. சங்கம் கொழும்புக்கிளை, நா.ஸ்ரீ. பிரகாசா, 150, சென். யோசப் வீதி, கொழும்பு 14*" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
- ✦ தற்போது க.பொ.த. (உ/த) பயிலும் (ஆண்டு 12, 13) மாணவர்களுக்கான விண்ணப்ப முடிவு 2004 நவம்பர் 20ஆம் திகதியாகும். பல்கலைக்கழகக் கல்விக்கான விண்ணப்பங்களை 2004 நவம்பர் 30ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வி.ஆர்.வடிவேற்கரசன்,**
தலைவர்.

**நா.ஸ்ரீபிரகாசா,**
கௌரவ புலமைப்பரிசில் செயலாளர்.

*(யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை)*

(C/38229)(42-18-46-24)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
20 - 06 - 1938



மறைவு
21 - 09 - 2004

## அமரர் சின்னத்தம்பி தங்கவடிவேல்

(முன்னாள் பொருளாளர், சுப்பர்மடம் முனீஸ்வரர் ஆலய பரிபாலனசபை, முன்னாள் உறுப்பினர், தமிழரசுக்கட்சி)

நாளை (21.10.2004) வியாழக்கிழமை தெணியம்மன் அந்தியேட்டி மடத்தில் காலை 8.00மணிக்கு நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும் அன்னாரின் இலலத்தில் நண்பகல் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சுப்பர்மடம்,*
*பருத்தித்துறை.*

- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(37739)

# நிறைந்த அறிவு, மாசற்ற செய்கை கலைமகள் சரஸ்வதி தந்தருள்வாள்



*"ஒன்றாய் பல உருவாய் அருவாய் நின்றருள்பவள் அன்னை ஆதிபராசக்தி"*

முழுமுதற் பொருளில் இருந்து வெளிப்படும் ஆற்றல் இப்பிரபஞ்சமெங்கும் விரிந்து பரந்து சர்வவியாபகமாகிறது.

இமமுழுமுதற் பொருளை இறைவன் என்றும், அதில் நின்று வெளிப்படும் ஆற்றலைச் சக்தி என்று பெண் வடிவு கொடுத்தும் வழிபட்டவர்கள் இந்துக்கள்.

சைவர்கள் இறைவனைச் சிவன் என அழைக்கின்றனர். சிவனும், சக்தியும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாது இணைந்திருப்பதைச் "சக்தி பின்னமிலான்" என்கிறது திருவருட்பயன். இதன் தோற்ற வெளிப்பாடே அர்த்தநாரீஸ்வரர் திருவுரு.

இந்து மதத்தின் உருவ வழிபாட்டினைக் கேலிசெய்பவர்களை மட்டுமல்ல பெண் உரிமை ஆர்வலர்களைக் கூட சைவத்தின் 'சிவசக்தி' தத்துவத்தினைக் கண்முன் நிறுத்தும்; அர்த்தநாரீஸ்வரர் திருவுரு சிந்திக்க வைத்திருக்கிறது.

புராதன சமூகங்கள் பொதுவாகத் தாய்த் தெய்வவழிபாட்டு முறையினைப் பின்பற்றியதாக அறியமுடிகிறது. மனிதன் தான் வாழ்கின்ற பூமியைத் தெய்வமாக பூமாதேவியாக வழிபட்டிருக்கின்றான்.

பிரபஞ்சம் எங்கணும் இருக்கின்ற சகல ஜீவராசிகள் அனைத்தையும் உலக மாதாவாகிய அன்னை தாங்கி அருளுவதனாலே தான் பிரம்மன் படைக்கிறான். விஷ்ணு காக்கிறான். சிவன் அழிக்கிறான். மகாசக்தியின் துணையில்லையேல் இம்மூவர் தொழில் நடைபெற முடியாததாகிவிடும்.

இதனால் தான், "அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை" என அன்னையைத் திருமந்திரம் சிறப்பிக்கிறது.

"தாயே ஆகி வளர்த்தவள்" என்று மாணிக்கவாசகர் பராசக்தியைத் தாயாகவும், "உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை உமையவள் என்றறியீரோ" என்று தாயைப் பராசக்தியாகவும் காணகிறார்கள்.

பசித்து அழுகின்ற குழந்தைக்குப் "பால் நினைந்தூட்டும் தாய்" போன்று, தன்குறை தீரத் தன்னை உள்ளன்போடு நாடிவரும் அன்பர்களுக்கெல்லாம் அஞ்சேல் என்று அடைக்கலம் கொடுப்பவள் அன்னை பராசக்தி.

அஞ்ஞான இருளை அகற்றி, மெஞ்ஞான ஒளியைப்பரப்பும் ஜோதியாக விளங்குவதால் 'தேவி' என்றும் -

மூவுலகிலுமே ஈடிணையற்ற பேரழகியாகத் திகழ்வதால் லலிதா திரிபுரசுந்தரி என்றும் -

உலகங்கள் அனைத்திற்கும் நாயகியாக இருப்பதால் ஈஸ்வரி என்றும் -

விஷமாகிய பாவங்களையும் தீமைகளையும் அகற்றுபவளாதலால் நாகேஸ்வரி என்றும் பற்பல நாமங்களால் அம்பிகை துதிக்கப்படுகிறாள்.

சகஸ்ரநாமம் (108 திருப்பெயர்கள்), லலிதா திரிசத் (300 திருப்பெயர்கள்), லலிதா அஷ்தோத்திர சகஸ்ர நாமம் (1008 திருப்பெயர்கள்) ஆகிய மந்திரங்களில் சக்தியின் சிறப்பியல்புகளைக் குறிக்கும் திருநாமங்களைக் கொண்டவை.

முத்தொழில்களைப் புரிகின்ற மும்மூர்த்திகளின் இயல்புகளுக்கு ஏற்றவாறு பராசக்தியை மூன்று திருநாமங்களிலே குறித்துரைக்கிறார் ஆதிசங்கரர்.

அற்புதமான பராக்கிரமமும், பிரசண்டவேகமும் வெல்லமுடியாத ராஜகெம்பீரமும்,

தட்டுத்தடைகளைத் தகர்த்தெறியும் திவ்விய பலாத்காரமும், கனல் பறக்கும் ஆர்வமும், நான் என்ற அகங்காரத்தை அழித்தொழிக்கும் வீராவேசமும், காக்கவும தாக்கவும் நீள்கின்ற திருக்கரங்களும், அதீதமான அன்பும் நிறைந்த ஜயசக்தியாக அழித்தற் தொழில் புரியும் சிவனின் அருட்சக்தியாக மகா துர்க்காவையும் -

தெளிவும், கனிவும், அழகும் அமைவும் பொருந்திய அற்புத வடிவமும் வர்ணிக்கமுடியாத கவர்ச்சியும் மோகன சௌந்தர்யமும், இதயத்தை ஈர்க்கும் வசீகரமும் சகல செல்வமும் யோகமும் பொருந்திய திருமகளாகக் காத்தற் தொழிலைச் செய்கின்ற விஷ்ணுவின் அருட்சக்தியாக மகாலக்ஷ்மியையும் -

ஆழ்ந்து நிறைந்த அறிவுத்திறனும் கவனமான மாசற்ற செய்கையும், அனைத்திலும் அமைதியும் சரியான நிறைவும் எல்லா வித்தைகளையும் ஊக்கி தூண்டி நடத்தும் உறுதியும் கொண்ட கலைமகளாக படைத்தற்தொழில் புரிகின்ற பிரம்மாவின் அருட்சக்தியாக மகா சரஸ்வதியையும் எம் கண்முன் நிறுத்துகிறார் ஆதிசங்கரர்.

இம்மூன்று தெய்வ வடிவங்களிலும் தோற்றம்பெறும் மகாசக்தியைப் போற்றி நோர்க்கப்படும் விரதமே நவராத்திரி என அழைக்கப்படுவது.

**- நயினை**
**மு.நா.நடராசா**

புரட்டாதி மாத அமாவாசையை அடுத்து வரும் பிரதமைத் திதிமுதல் நவமித் திதி ஈறாக வரும் ஒன்பது தினங்களின் முதல் மூன்று தினங்களும் வீரத்தை வேண்டி துர்க்காவையும் நடு மூன்றுதினங்களும் குறைவற்ற செல்வத்தை வேண்டி இலக்குமியையும் இறுதி மூன்று தினங்களும் கலைகள் அறுபத்து நான்கினையும் எமக்கு அருளவேண்டி சரஸ்வதியையும் பிரார்த்தித்து உலகெங்கிலும் வாழ்கின்ற கோடிக்கணக்கான இந்துக்கள் இவ்விரதத்தினை அனுஷ்டிக்கிறார்கள்.

கல்விக்கூடங்கள்,வேலைத்தளங்கள், பணிமனைகள் அனைத்தும் இத்தினங்களில் விழாக கோலம் பூண்டிருக்கும்.

தீமைகள் அனைத்தையும் அழித்து 'சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வை' அருளும்படி அன்னையை வேண்டுவோம்.

பராசக்தி நல்லன எல்லாவற்றையும் தருவாள் (இன்று சரஸ்வதி பூசை ஆரம்பம்)

## அம்பாறை மாவட்டத்திலுள்ள

# வட்டமடு காணிப் பிரச்சினைக்கு தற்காலிகமாக தீர்வு காணப்பட்டது

கல்முனை,ஒக்.20

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள வட்டமடு காணி தொடர்பான பிரச்சினைக்கு நேற்றுமூன்தினம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் மாவட்ட அரச அதிபரினால் கூட்டப்பட்ட விசேட கூட்டத்தில் தற்காலிக தீர்வொன்று காணப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் முரளி, துணைப்பொறுப்பாளர் வினோ ஆகியோரும் -

முஸ்லிம் விவசாயிகள் தரப்பில் எம்.ஏ.அப்துல் காதர், ஐ.எம்.இப்ராகிம் மற்றும் எம்.அகமது லெப்பை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிவில் அதிகாரிகளாக அம்பாறை அரச அதிபர் ஹேரத் அபயவிக்கிரமவுடன் அக்கரைப்பற்று, திருக்கோவில் பிரதேச செயலாளர்களும் மாகாணக் காணி ஆணையாளர் ஆர்.ரவீந்திரன், காணி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.பரமலிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

குறிப்பிட்ட காணி, கால்நடை மேய்ச்சல் தரைக்கு 1974 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அதற்குப் பின்பு சில அதிகாரிகளினால் விவசாயச் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அரச அதிபர் இந்தக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டார்.

இதனால், இந்தக்காணி தொடர்பாக முரணபாடுகள் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி தற்காலிகமாக 300 ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கு அனுமதியளிப்பது என்று தீமானிக்கப்படடுள்ளதாக இக்கூட்டத்தில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.


3 மாத காலத்திற்குள் சகல ஆவணங்களும் காணி ஆணையாளரினால் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணிக்கு அப்பால் வேறு இடத்தில் காணி வழங்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# பொது நிகழ்வுகளில்...




இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு உதவிப்பொருள்கள் வழங்கும் புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் (IOM) திட்டத்தின் கீழ் நெடுந்தீவில் நடந்த கையளிப்பு விழாவின்போது எடுக்கப்பட்ட படம்.

அகதி ஒருவருக்கு நெடுந்தீவு பிரதேசச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.பேரானந்தம் உதவிப்பொருளை வழங்குகிறார். அந்நிறுவன அதிகாரிகள் அருகில் காணப்படுகின்றனர்.



யாழ். மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாணப் பிள்ளை நேய அபிவிருத்தி நிலையங்களினால் அண்மையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடத்தப்பட்ட முன்பள்ளிக் காட்சி நிகழ்வில் ஆசிரியர்கள் கண்காட்சியின் நோக்கம் பற்றிச் சிறார்களுக்கு விளக்குவதைப் படத்தில் காணலாம். *(படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)*



'ஆரம்ப கணித விளையாட்டுக்கள்' ஆசிரியர் வழிகாட்டி நூல் வெளியீடு அண்மையில் யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நூலின் முதற்பிரதியை யாழ். வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியத்திடமிருந்து நல்லூர்க் கோட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலேந்திரா பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் திருமதி ஜெயந்தி சாந்தன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)*



பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன்மீது பாடப்பட்ட இசைமாலை வெளியீட்டு விழா அண்மையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கௌரவிப்புப்பெற்ற கவிஞர்களான வே. ஞானகாந்தன், கா.பொ.கி.குலசிங்கம், கு.சரவணபவானந்தன் ஆகியோருடன் பாரம்பரிய மேம்பாட்டுக்கழக உறுப்பினர்கள் இணைந்து எடுத்துக்கொண்ட படம். (எ)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Pentium-4 Computer விற்பனைக்கு உண்டு. Include Printer, CD Rom, CD Writer, Ups Prize 55000/= Contact: Mrs.K.Neelambihai, 09, Maruthady Rd, Jaffna. (37751)

மோட்டரோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:S.இராஜரட்ணம், மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய். (37737)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் 1¼ பரப்பில் அமைந்துள்ள புதிய வீடும், நல்லூருக்கு அருகில் 4 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம், 144/2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (37781)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விற்பனைக்குண்டு. 1Kg 120/=, கல்பேட் 1Kg 130/=, சுத்தம்செய்யப்பட்ட புறொயிலர் 1Kg 200/=. தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (37780)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்

Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails

ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.

**SAAMSTECH**

841, Hospital Road, Jaffna.

Phone: 0773 068968.

(சி-37842)

## தவறிவிட்டது

மாட்டின் றோட், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி குமாரசூரியர் என்பவருடைய திறப்புக்கோர்வை ஒன்று பிள்ளையார் டொலருடன் திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077-6315923 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (37772)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிக்வும் தரமான, இரண்டுமுறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள் 35/-, பேட்டுக்குஞ்சு 50/- 25.10.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக் கிளையிலும், சூட்டிபாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-38212)

## வீதி சேதம்

வலி.தென்மேற்கு,ஒக்.20

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமையால் குண்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இவ் வீதியைத் திருத்துமாறு பல தடவைகள் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாயிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு வேண்டுகோள் விடுத்திருந்தபோதிலும் இதுவரை திருத்தவேலை எதுவும் செய்யப்படவில்லை என இப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (8-135)

## மாணவர்களுக்கான கணனிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.20.

தமிழீழ மாணவர் அமைப்பும், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான சுழற்சிமுறையிலான கணனிக் கருத்தரங்குகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குக் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், 12.30 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் -

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்திலும், 12.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இந்தக் கணனிக் கருத்தரங்கில் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களும், உயர்தர மாணவர்களும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் இந்தச் சுழற்சிமுறையிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் எழிலன்பன் கேட்டுள்ளார். (8-13)

## இதய அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட உறுப்பினருமாகிய Dr.நாகலிங்கம் சக்திவேல்

சங்கத்தின் அபிமானி துஸ்யந்தன்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தங்கமுத்தம்மா நாகலிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தெல்லிப்பழை

(37774) (26-34-16-15) இந்து இளைஞர் சங்கத்தினர்.

## கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாவது பரிசு | இல. | 1760 |
| இரண்டாவது பரிசு | இல. | 1213 |
| மூன்றாவது பரிசு | இல. | 1203 |
| நான்காவது பரிசு | இல. | 1082 |

(37779)

எதிர்வரும் 24.10.2004 மாலை 6 மணிக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

குருசோ வீதி, யாழ்ப்பாணம். செயலாளர்.

## பதவி வெற்றிடம்

பதவி: ஆயுள் காப்புறுதிப் பிரதிநிதி

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதரம் (கணிதபாட சித்தியுடன்)

மேலதிக தகைமை: கூடிய வியாபாரத் தொடர்புகள், சமூகத் தொடர்புகள், முழுநேரமாக இத்தொழிலில் ஈடுபடக் கூடியவர்கள், தொடர்பாடல் தகைமை அத்துடன், அதிகளவு உழைக்கும் ஆர்வம்.

வெகுமதிகள்: கவர்ச்சிகரமான வரையறுக்கப்படாத வருமான சந்தர்ப்பங்கள், இலவச ஆயுள் காப்புறுதி, மாதாந்த வருடாந்த போட்டிகள், பதவியுயர்வு வாய்ப்புகள்

★ தேர்வுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு முழுமையான பயிற்சிகள் வ்ழங்கப்படும்

சுயவிவரக் கோவைகளை 25-10-2004 இற்கு முன் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(37782) (26-34-15-16)

**விளம்பர இலக்கம்: 2410, C/o உதயன், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### இளையதம்பி அருளையா (ஓய்வுபெற்ற S.P.H.I.)



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் தற்போது சுதுமலையை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி அருளையா அவர்கள் நேற்று (19-10-2004) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இளையதம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் சரஸவதி, காலஞ்சென்றவர்களான செல்லையா, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவயோகம், ஞானயோகம் (கொழும்பு), சிவஞானசுந்தரம் (இத்தாலி), றோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கார்த்திகேசு (விமலநாதன்), சிவச்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஜீவிதா, ஜான்சி, மயூரிக்கா, மதுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-10-2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு சுதுமலையில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இ.கார்த்திகேசு
(விமலநாதன் - மருமகன்).

சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (37775)(26-16-15-34)


# வெற்றி நிச்சயம்

# IIS

## மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2005

எமது நிறுவனத்தால் ஆண்டுதோறும் கணனித்துறையிலே ஆர்வமுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் கல்வியாண்டு 2005/2006 புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்வரும் கல்வியாண்டு எமது நிறுவனத்தின் 10வது சிறப்பு வெற்றியாண்டு என்பதால் மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

**தெரிவு செய்யும் முறை**

இருவேறுபட்ட முறைகளினூடாக மாணவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்

1) போட்டி பரீட்சையின் அடிப்படையில்
இம்முறையின் பிரகாரம் விண்ணப்பிக்கும் மாணவர்கள் புலமைப்பரிசிலைத் தட்டிக்கொள்வதற்கு IIS இனால் நடாத்தப்படும் (நுண்ணறிவு/பொது அறிவு) போட்டிப்பரீட்சையில் தோற்றுவதன் மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள்.

2) A/L பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில்
இம்முறையின் கீழ் மாணவர்கள் தங்களது A/L பரீட்சை(எவ்வருடத்தில் தோற்றியிருப்பினும்) பெறுபேறுகளினைக் கொண்டு விண்ணப்பிக்க முடியும். மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவீர்கள்.

**விண்ணப்பிக்கும் முறை**

உங்கள் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து ரூபா 200 பரீட்சைக்கட்டணத்துடன் (19 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக்கட்டணம் ரூபா 150 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர்

Director, Institute of Informatics Studies.

எனும் பெயர் இட்டு பணம் பெறும் நிலையம் Post Office, Jaffna. எனக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி: Director, Institute of Informatics Studies, 100, Clock Tower Road, Jaffna.

**விண்ணப்பப் பதிவுகள் 23-10-2004 சனிக்கிழமை விஜயதசமி அன்று முதல் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் விசேட சலுகை வழங்கப்படும்**

**நீங்கள் பெற்றுக்கொள்ளும் புலமைப்பரிசிலிற்கூடாக இரு கற்கை நெறிகளினைக் கற்பதற்கு தகுதியுடையவர் ஆகின்றீர்கள்**

பின்வரும் இடங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்:

♦ IIS - தலைமை அலுவலகம், ♦ IIS - நெல்லியடி, ♦ PC Paradise - யாழ்ப்பாணம், ♦ IIS Office Automation ♦ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் ♦ ஞாபன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் ♦ கனகா புத்தகசாலை, திருநெல்வேலி ♦ நாயகபாலன் புத்தகசாலை, மானிப்பாய் ♦ துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம் ♦ கரன் புத்தகசாலை, சுன்னாகம் ♦ New Arun Press, சாவகச்சேரி ♦ நியூ அருள்நாயகி புத்தகசாலை, கொடிகாமம்

**Computer P4**

போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாகச் செயற்படும் மாணவர் ஒருவருக்கு புத்தம்புதிய P IV கணனி ஒன்று பரிசளிக்கப்படும்.

**உங்களுக்கே !**



**A/L 2005 பரீட்சைக்குத்தோற்றவுள்ள மாணவர்களுக்காகவே May மாதத்தில் விசேட பிரிவு ஆரம்பமாகும்**

**சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் !**

**கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்**

## வெலிகண்டலில் விபத்து: இருவர் படுகாயம்!

பரந்தன்,ஒக்.20

கண்டாவளை வெலிகண்டல் பாலமருகே நேற்றுமுன்தினம் 12 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இருவர் படுகாயமடைந்தனர்.

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கித் திருமண நிகழ்விற்காகச் சென்றுகொண்டிருந்த ஹயஸ் வாகனமும் பரந்தன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹண்டர் வாகனமும் நேரெதிரே மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கிய ஹயஸ் வாகனத்தில் இருந்த புதுமணத்தம்பதியினர் தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டனர்.

இந்த விபத்துத் தொடர்பாகத் தமிழீழக் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-203-352)

# கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.20

கட்டுத்துவக்கு வெடித்து உயிரிழந்தார் எனத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

செம்பியன்பற்று, மாமுனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி சண்முகநாதன் (வயது 28) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் மேற்படி சம்பவத்தில் காயமடைந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸில் கொண்டு வரப்பட்ட வேளையில் இடைவழியில் உயிரிழந்தார் என்று கூறப்பட்டது.

இவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருககிறது. (4-6)

## கிளிநொச்சியில் நூலகவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

வட்டக்கச்சி,ஒக்.20

அனைத்துலக பாடசாலை நூலக நாள் எதிர்வரும் 25ஆம் திகதி கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்காக எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை அனைத்துப் பாடசாலைகளிலும் நூலக வாரமாக அனுஷ்டிக்குமாறும் இக்காலத்தில் பாடசாலை நூலகங்களின விருத்தியில் கவனம் செலுத்துமாறும் பாடசாலை அதிபர்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார். (4-405)

## ஓவியப்போட்டிக்கான பரிசளிப்பு வைபவம்

வட்டக்கச்சி,ஒக்.20

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் 'யுனிசெவ்' நிறுவனமும் இணைந்து சிறுவர் தினத்தை ஒட்டி நடத்திய ஓவியப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 'யுனிசெவ்' பிரதிநிதிகள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர். (4-405)

# 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் நான்கு கிராமங்கள் புனரமைக்கப்படும்

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு கிராமங்கள் 'நிக்கொட்' நிறுவனத்தினால் புனரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் "வடகிழக்கு சமுதாய மீளமைப்புக் கருத் திட்டத்தின் (நிக்கொட்) கீழ் இந்த நான்கு கிராமங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தங்கள் கைசாத்திடப்பட்டு நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்திற்கு அமைவாக விநாயகபுரம், காஞ்சிபுரம் ஆகிய இரு கிராமங்கள் முறையே 50 லட்சம் ரூபா செலவிலும், எள்ளுககாடு கிராமம், கோவில் வயல் கிராமம் என்பன தலா 60 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

புனரமைப்புத்திட்டத்தின் கீழ் வீதி மதகுகள், பொது நோக்குமண்டபங்கள் போன்ற கட்டுமான வேலைகளும் குழுக்களை வலுப்படுத்தல், இளைஞர் யுவதிகளுக்கான மேம்பாட்டுத்திட்டங்கள், வருமான அதிகரிப்புக்கான கடன் வழங்கும் திட்டங்கள் என்பனவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி அரச அதிபர் பணிமனையில் கைச்சாத்தாகியது. இந்த நிகழ்வில் அரச அதிபர் தி.இராசநாயகமும், 'நிக்கொட்' நிறுவன பிரதித் திட்டப் பணிப்பாளர் க.பார்த்தீபனும் கைச்சாத்திட்டனர்.

அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கும் கிளி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் மாவட்டப் பணிப்பாளர் வ.இரவிச்சந்திரனும், 'நிக்கொட்' செயற்றிட்ட இணைப்பாளர் க.இரவிகாந்தும் கையொப்பமிட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் 'நிக்கொட்' நிறுவன உதவித்திட்டப் பணிப்பாளர் துஸ்யந்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழக பொறியியலாளர் திருச்செந்தூரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (4-88)



கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக 'ஒக்ஸ்பாம்' நிறுவன ஆதரவுடன் நடத்திவரும் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு சுகாதார விவரணச் சித்திரமான 'உயிர்க்கொல்லி' நிகழ்வினை யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் பல்வேறு கிராமங்களில் நடத்தினர். அந்நிகழ்வுகளின் சில காட்சிகள் இவை. *(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

## ஆசிரியர்தின நிகழ்வு

புதுக்குடியிருப்பு,ஒக்.20

சர்வதேச ஆசிரியர் தினம் புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வித்தியாலய மாணவன் ஞா.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கினை தரம் ஒன்று மாணவர்கள் ஏற்றினர்.

தமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைக கௌரவிக்கும் முகமாகப் பெருமளவு பரிசில்களை மாணவர்கள் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள், மாணவர்கள் பங்குபற்றிய கவிதை, பேச்சு, வயலின் இசை என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வின் விசேட நிகழ்வாக வித்தியாலய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றும் இடம்பெற்றது. (4-5-353)

# காணி அற்ற அரச ஊழியர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்

கிளிநொச்சி நகர அரச திணைக்களங்களில் கடமையாற்றும் காணியற்ற அரச ஊழியர்களுககுக் காணிகளை வழங்க கிளிநொச்சி நகர காணியற்ற அரச அலுவலர் சங்கம் பதிவுகளை மேற்கொண்டு வருகிறது.

ஒருவருக்கு கால் ஏக்கர் வீதம் அறிவியல் நகர், பரந்தன் பகுதிகளிலே இக்காணிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச துறை சாராத பல தனி அமைப்புக்களில் வேலை செய்யும் அலுவலர்களில் காணி அற்றோருக்கும் காணி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை விடுவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய நியமனங்கள் நீண்டகாலமாக அரச சேவையில் வழங்கப்படாததால் கல்விகற்ற இளைஞர்கள் பலர் தனியார் துறையினர், தொண்டர் அமைப்புக்களால் உள்ளீர்க்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் கிளிநொச்சி மக்களுக்குத் தொடர்ச்சியாய் பல ஆண்டுகள் சேவை செய்கின்ற போதும் அவர்களின் விண்ணப்பங்கள் புறக்கணிககப்பட்டமை அநீதியான செயலாகும் என்றும், எனவே சம்பந்தப்பட்ட சங்கமோ அல்லது அரச அதிபரோ கிளிநொச்சி நகரில் கடமையாற்றும் தனியார் அல்லது தொண்டர் நிறுவனங்களில் கடமையாற்றும் காணியற்ற அலுவலர்களை இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் - வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (4-393)




# கிளிநொச்சி - வட்டக்கச்சி வீதி மோசமாக சேதமடைந்த நிலையில்

கிளிநொச்சி,ஒக்.20

கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதி மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாமல் சேதமடைந்து காணப்படுவதாகப் பொதுமக்கள புகார் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி இந்த ஆண்டின் முற்பகுதியில் கிரவல் இடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது. ஆனால், தார் இடப்படாமையால் தற்போது மோசமாக சேதமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி செல்கின்ற மக்கள் கூடுதலாக இந்த வழியினையே பயன்படுத்துகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறான எத்தனையோ வீதிகள் தாரிடப்பட்டு செப்பனிடப்பட்டபோதும், இந்த வீதி இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாரிகாலம் ஆரம்பமான இந்த வேளையில் இவ்வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-ரி)

## ஆர்மோனிய வித்துவானின் நினைவாக மண்டபம்

கிளிநொச்சி,ஒக்.20

கிளிநொச்சி கவின் கலைமன்றத்தில் பிரபல ஆர்மோனிய வித்துவான் சுப்பையாவின் ஞாபகார்த்தமாக மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மண்டபத்தை திறந்துவைத்தார். பெயர்ப்பலகையினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் திரைநீக்கம் செய்தார். (4)

### கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில்

# அரச உத்தியோகத்தர்களுக்கான தொழில்சார் கணனிப் பயிற்சிநெறி

வட்டக்கச்சி,ஒக்.20

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான தொழில்திறன் விருத்திக் கணனிப்பயிற்சி நெறி இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட கல்விக் குழுக் கூட்டத் தீர்மானத்திற்கமையவே இக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தொழில்நுட்பக்கல்வி நிறுவக நிர்வாக உத்தியோகத்தர் கு.சேரன் தெரிவித்தார்.

இக்கற்கை நெறியானது கிளிநொச்சி நிலையத்திலும் பளைப் பிராந்திய நிலையத்திலும் பூநகரிப் பிர.ந்திய நிலையத்திலும் ஆரம்பிக்கபபடவுள்ளது. இதன் மூலம் அரச ஊழியர்கள் தமது தொழில்திறனை விருத்தி செய்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-405)

## 'முதியோர் வாழ உதவுவோம்' நூல்வெளியீடு

கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியவர் இல்லத்தின் முதியோர் தின விழா அண்மையில் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு முதியோர்களைக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் முதியோர்களுக்கு அளப்பரிய சேவையாற்றிமைக்காக தம்பிஐயா என்பவர் அரச அதிபரினால் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வின் போது இல்லச் செயலாளர் டாக்டர் சமுருகானந்தன் தேசிய சாகித்திய விருது பெற்றமைக்காக கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவி அனுசுயா எழுதிய 'முதியோர் வாழ உதவுவோம்' என்ற நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலின் முதற பிரதியை அரச அதிபர் தி.இராசநாயகத்திடமிருந்து இல்லப் பொருளாளர் சாந்தலிங்கம் பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரையை கலியுக வரதனும் மதிப்புரையை நிரஞ்சனும் நிகழ்த்தினார்கள். (8)

## கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

பூநகரி,ஒக்.20

பூநகரிப் பிரதேசம் முழுவதும் காலபோகப் பயிற்செய்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இப்பிரதேசத்தில் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு பூநகரிப் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதிகளில் வெளிப்பிரதேசங்களில் இருந்து கால்நடைகளைப் பூநகரிப் பிரதேசத்தினுள் கொண்டுவருபவர்கள் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின பொறுப்பாளரின் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4-6-403)

# பூநகரி, முழங்காவில் பகுதிகளில் மரக்கறிக் கொள்வனவு நிலையங்கள்

பூநகரி, முழங்காவில் ஆகிய பகுதிகளில் மரக்கறிக் கொள்வனவு நிலையங்களினை அமைத்து அவற்றை சிறப்பாகச் செயற்படுத்துவதற்காகப் பிரதேச செயலர் தலைமையில் நிலையியல் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் விவசாயப் பெரும்பாக உத்தியோகத்தர், விவசாயப்போதனாசிரியர், பிரதேச கமக்கார அமைப்புத் தலைவர், கமநல விரிவாக்க அலுவலர், கிராம சேவையாளர் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

பூநகரியில் கடந்த வாரம் இடம்பெற்ற மரககறிக் கொள்வனவு நிலையம் அமைத்தல் தொடர்பான கலந்துரையாடலின்போதே இக்குழு தெரிவு செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடலின்போது விவசாய போதனாசிரியர் திருமதி சத்திய நடராஜா, பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி, மாவட்ட திட்டமிடல் அதிகாரி, கமக்கார அமைப்புக்களின் தலைவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (8-403-203)

# பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம்
உங்கள் கைகளிலே மறந்துவிடாதீர்கள்

ஆளுமை உருவாக்கத்திற்கு ஒரு வரப்பிரசாதம். புதிய இலத்திரனியல் யுகத்தில் மழலைகளுக்காகவே ஏற்படுத்தப்பட்ட புதிய திட்டம்

உளவியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட சிறுவர்களுக்கான

## விசேட கணனிக் கற்கைநெறி

Diploma in Kids Computing -04 Month



- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம்
- அனுமதிப் பரீட்சையோ வீண் நேரவிரயமோ இல்லை
- சிறந்த உளவியல் நிபுணர்களின் வழிகாட்டலில் அனுபவமுள்ள விரிவுரையாளர்கள்

குறைந்த கட்டணத்தில் நிறைவான அங்கீகாரம்

விஜயதசமியை முன்னிட்டு 10 மாணவர்களுக்கு இலவச கணனி கற்கை நெறி

விஜயதசமி அன்றும் புதிய பிரிவு ஆரம்பம்

- Diploma in Ms Office - 03 Months
- Diploma in Desktop publishing - 03 Months
- Diploma in Kids Computing - 04 Months

## City Informatics Centre

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி (Point Pedro Road, Jaffna)
E-mail-ciccom2004@yahoo.com.
T.p.-0602213414, 0777229080.
(37789)(34-16-13)


## நயினாதீவு தெற்கு மாதர் சங்கத்தின் பாராட்டும் வாழ்த்தும்

எமது மாதர் சங்கத்திற்கு, நாடாளுமன்ற உறுப்பினராகிய திருமதி பத்மினி சிதம்பரநாதன் அவர்கள் தனது நிதி ஒதுக்கீட்டில் 25,000/- ரூபாவை வேலணைப் பிரதேசசபையூடாகப் பெற்றுத் தந்தமைக்காக அவரைப் பாராட்டியும் அவருடைய சேவை மேலும் நீடிக்கவேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

(37787)(39-34-16-13) **நயினாதீவு தெற்கு மாதர் சங்கம்.**

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம்

## இலிகிதர் பதவி வெற்றிடம்

01. சம்பள அளவுத்திட்டம்: 4000-5550 (75/10-80/10) (கூ. வே. ஆ. சுற்றுநிருபம் 31/99 இன்படி )
குறியீட்டு இல. 302/13-165/88 இன்படி
02. வயது: 18 தொடக்கம் 40 வரை
(சங்கப் பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
03. விண்ணப்ப முடிவுதிகதி: 05. 11. 2004
04. பிணைப்பணம்: ரொக்கம் 5000/=
05. 1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கத்தில் ரூபா 10/- சீசெலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.
3. கணனி அறிவும், திறனும் அவசியமாக இருத்தல்வேண்டும்.
06. வேறு சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும்.
07. விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுள்ளது, பருத்தித்துறை வீதி, கொடிகாமம் என்ற முகவரிக்கு 'இலிகிதர் பதவிக்கான விணணப்பம்' எனக் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.
08. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் இரண்டுவருட அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் அதே பதவியிலான நான்கு வருட அனுபவம்
அல்லது
ஆ) க.பொ.த. (சாதாரணதரம்) 06 பாடங்களில் கணிதம், தமிழ் உட்பட ஐந்து திறமைச் சித்தியும், கூட்டுறவுச் சங்கத்தின் இலிகிதர் பதவியில் இரண்டு வருட அனுபவமும்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம். - பொது முகாமையாளர்.
(சீ-38402) (34-16-13)

# நூல்களின் கண்காட்சி

தென்மராட்சி,ஒக்.20

பாடசாலைகளுக்கான நூலகக் கல்வி வாரத்தையொட்டி தென்மராட்சி கல்விவலய மட்ட நூல்களின் கண்காட்சி ஒக்ரோபர் 30 ஆம, 31 ஆம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள், பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களைக் காட்சிப்படுத்தி மலிவுவிலையில் விற்பனைசெய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்ப வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்பு வரையாகப் பாடநூல்கள் கண்காட்சி யில் வைக்கப்படுமெனவும் -

அனைத்து மாணவர்களும் இக்கண்காட்சி யினைப் பார்வையிடலாமென வலயக் கல்வி அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

(117)

# அந்தணச் சிறுவர்களுக்கான வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஒக்.20

அந்தணச் சிறார்களுக்கான சமஸ்கிருத வகுப்புகளும், ஆங்கில வகுப்புகளும் எதிர் வரும் 23 ஆம் திகதி கைலாசநாத வேத சிவாகம பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளன.

பாடசாலையில் சேர்ந்து கற்கவிரும்பும் அந்தண மாணவர்கள் சிவஸ்ரீ கை.வாமதேவக் குருக்கள், 107, நாயன்மார் வீதி, நல்லூர் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தங்கியிருந்து கற்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

(8-203)

# சுகாதாரத் திணைக்களத்தினர் திடீர் சோதனை

தென்மராட்சி,ஒக்.20

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத் தினர் டச்சு வீதி மற்றும் நுணாவில் ஆகிய பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது திடீர்சோதனைகளை நடத்தினர்.

இந்தச் சோதனையில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு வர்த்தகர் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நக ரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சு.மணி வர்ணம் தலைமையிலான குழுவினர் இப்பரி சோதனைகளை மேற்கொண்டனர்.

(8-117)

## UNIVERSITY OF JAFFNA - SRILANKA

### Faculty of Graduate Studies

### Notice

Post graduate Diploma in Population Development Studies - Academic Year 2004/2005 Batch I.

The Lectures for the above course are scheduled to commence on 23.10.2004 (Saturday) at 9.00 a.m. at the Geography Lecture Hall, University of Jaffna.

Vice - Chancellor,
2004.10.19 (சீ-38300)

# ஏடுகள் விநியோகம்

நவராத்திரியை முன்னிட்டு அம்பிகை பாடல்களும், வித்தியாரம்ப ஏடுகளும் இணுவில் அண்ணா தொழிலகத்தில் இலவசமாக வழங்கப் படவுள்ளன.

இவற்றைப் பெறவிரும்புவோர் மேற்படி தொழிலகத்தில் இன்றும் நாளையும் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-ரி)

உ



## மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அமமன் தேவஸ்தான விசேட அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மனின் திருவுளப்பாங்கின்படி கேதாரகௌரி விரதம் பிற்பகுதி 5 நாள்களும் நடைபெற்று கௌரி காப்பு வழங்கப்படும்.

(08.11.2004 தொடக்கம் 12.11.2004வரை)

- கௌரி காப்பு பெறுபவர்கள் கோயிலில் பதிவுசெய்யவும்.

கிரியைகளை நயினாதீவு பிரம்மஸ்ரீ **இ.விஸ்வநாதக்குருக்கள்** நடத்திவைப்பார்.

பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயில், மட்டுவில் (37790)(34-16-13)
சி.சிவகுரு தர்மகர்த்தா

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆய்வுகூட உதவியாளர்
திரு. **ப.மகேசனின்** அன்புத் தந்தையார்

### சிவஸ்ரீ சொக்கலிங்கக் குருக்கள் பசுபதிநாத ஐயர்

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு துயருறும் அன்னாரது குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
(சீ38401)(34-16-13)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்/வண்ணை நாவலர் மகாவித்தியாலய
இசை ஆசிரியை திருமதி **ஞானாம்பிகை ஜெகதீஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி புவனேஸ்வரி அருளம்பலம்

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

இன்ச ஆசிரியர் கழகம்,
யாழ்.வலயம்.
(37783)(43-34-16-13)

## மரண அறிவித்தல்

### வினாசி சின்னத்தம்பி



இல.31/16, சபாபதி லேன், தலையாளி கிழக்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசி சின்னத் தம்பி (பெரியதம்பி) 18.10.2004 அன்று கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசி-சின் னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் புவனேஸ் வரியின் அன்புக் கணவரும் செல்வராசா, நாகேஸ்வரி, செல்வராணி, விமலராணி, விமலநாதன், ராஜ்குமார் (ஊழியர், மத்திய மருந்தகமும் மகப்பேற்றுமனையும், குருநகர்), நாகேஸ்வரன், சதீஸ் குமார், புஸ்பராணி, வசந்தராணி, காலஞ்சென்ற ஜமுனாராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தவராசா, மாலினி, ராஜ்குமார், பிறேமிளா, சிவாஜினி, டெய்சி, வேவி, சுகந்தினி, ஐங்கரன், யெஸ்லி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மார்க்கண்டு, சின்னத்துரை, பாக்கியம் மற்றும் லக்சுமி, ராசு, சின்னம்மா, துரை, இந்திராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2004) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவு டல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தலையாளி, கொக்குவில் (37788) (34-16-13)
தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.


இன்று 20.10.2004 ஓராண்டு நிறைவு காணும்



# நெல்லை சில்க்-நெல்லியடி

★ நாகரிக உலகின் சொர்க்கபுரி ★

- ★இந்த ஓராண்டில் ஆயிரம் ஆயிரம் வாடிக்கையாளர்களை மனம் நிறைவுசெய்த "ஸ்தாபனம்".
- ★எமது நம்பகரமான மேலான சேவை தொடரும்.
- ★இன்று கொள்முதல் செய்யும் ரூபா1000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு மேலதிக பட்டுச்சேலை
- ★அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு நடைபெறும்.

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.



நெல்லியடி. C/38299 S.அகிலதாஸ், உரிமையாளரும் மற்றும் ஊழியர்களும்.

# ஜே.வி.பியின் அண்மைக்கால கருத்துகளை எந்த இன மக்களுமே ஏற்கமாட்டார்கள்

## றுகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் உதயனுக்கு தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.20

ஜே.வி.பி. போன்ற பேரினவாதக் கட்சிகள் நாட்டைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லும் முயற்சியில் இறங்கியுள்ளன.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மாத்தறை றுகுணு பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் சுரஞ்ஜித் குணசேகர.

றுகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் அடங்கிய குழுவொன்று நேற்று குடாநாட்டிற்கு வருகை தந்தது.

இக்குழுவினர் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இக்குழுவினரின் வருகையின் நோக்கம் என்ன என்று விரிவுரையாளர் சுரஞ்ஜித் குணசேகரவிடம் 'உதயன்' செய்தியாளர் கேட்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

றுகுணு பல்கலைக்கழகம் இலங்கையிலேயே அதிக தூரத்தில் உள்ளது. இங்கு சிங்கள மாணவர்கள் அதுவும் முற்றுமுழுதாக பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களே கல்வி கற்கின்றனர். இந்த மாணவர்கள் தென்னிலங்கையில் பேரினவாதம பேசுகின்ற பத்திரிகைகளை அப்படியே நம்ப வேண்டியவர்களாக உள்ளனர். இதனால், அவர்களுக்கு உண்மையான நிலைவரம் எதுவும் தெரியாது.

அதேபோல குடாநாட்டில் கடந்த காலங்களில இடம்பெற்ற யுத்தக் கொடூரங்கள், அதனால் மக்கள் பட்ட துன்ப துயரங்கள் என்பனவும் இந்த மாணவர்களுக்குத் தெரியாது.

யுத்தத்தின் வடுக்களை நேரில் பார்த்து ஆய்ந்து அறிந்து அது தொடர்பான தெளிவை மாணவர் மத்தியில் ஏற்படுத்துவதற்காகவே இங்கு வந்துள்ளோம்.

நாங்கள் குடாநாட்டைப் பார்ப்பதற்காக வரவில்லை. இங்குள்ள நிலைமைகள் பற்றி மாணவர் மத்தியிலுள்ள தவறான சிந்தனையை உடைப்பதற்காகவே இச் சுற்றுலாவை மேற்கொண்டுளளோம்.

சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைகள் பற்றி ஆராய வந்துள்ள அதேவேளை, இங்குள்ள பிரச்சினை பற்றி அறியாத சிறுபான்மையினராகவே நாங்கள் இருக்கின்றோம். அந்த நிலைமையை மாற்றவேண்டிய பாரிய பொறுப்பு விரிவுரையாளர்களாகிய எமக்குண்டு.

மாணவர் மத்தியில் தெளிவை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நாட்டிற்கு நல்ல சேவையை வழங்கலாம் என்று எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மககள் கடந்த கால அரசுகளின் செயற்பாடுகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாகத் தென்பகுதி மக்களுக்கு நிச்சயமாக எடுத்து விளக்குவோம்.

இந்த நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல்த் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அனைத்து தரப்பினர்களுடைய விருப்பமாகும். அந்த நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இரு தரப்பும் உடனடியாகப் பேச்சு மேசைக்கு வரவேண்டும்.

றுகுணு பல்கலைக்கழகத்தை சேர்ந்தவர்கள் ஜே.வி.பியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள் என்று கூறப்படுகிறது. அதில் தவறில்லை. ஆனால், ஜே.வி.பியினரால் அண்மைக்காலமாக முன்வைக்கப்படுகின்ற கருத்துகள் தமிழ்,முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு ஏற்புடையதல்ல. அவர்கள் கூறும் இனவாதக் கருத்துக்கள் நாட்டைத் தவறான வழியில் இட்டுச் செல்வனவாகவே காணப்படுகின்றன.

நாட்டிலுள்ள இனப்பிரச்சினையை ஜே.வி.பியினர் நன்குபுரிந்துகொள்ள வேண்டும் அதற்கு சில விடயங்களை எடுத்துக் கூறி அவர்களுடைய கருத்துக்களை மாற்ற முயற்சிப்போம்.

தற்போது இந்த நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இல்லை. தென்பகுதி மக்கள் மத்தியில் சில தவறான கருத்துக்கள் நிலவினாலும் யுத்தம் ஏற்படுவதனை அவர்களும் விரும்பவில்லை. அதுமட்டுமன்றி, இந்த இனப்பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளதால் ஏதாவது ஒரு தரப்பு யுத்தத்தை ஆரம்பிப்பதை ஏனைய உலக நாடுகள் அனுமதிக்கமாட்டா. அது மட்டுமல்லாது அரசிற்கு தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகளும் யுத்தத்திற்கு செல்வதற்கு இடமளிக்கமாட்டாது - என்றார் அவர்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய உபதலைவர் அஜெயராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளான வணபிதா சி.ஜ. ஜெயக்குமார், வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, திருமதி சரோஜா சிவச்சந்திரன், பி.விக்னேஸ்வரன், எஸ்.சிதம்பரநாதன், எஸ்.கதிர்காமத்தம்பி மற்றும் என்.சோதிநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-5)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.20

வலிகாமம் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்கள்.

**16 வயதுப் பிரிவு**

☆ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

☆ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம் காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் ஆட்டங்கள்.

**16 வயதுப் பிரிவு**

☆ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

☆ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.

பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறும் ஆட்டம்.

**18 வயதுப் பிரிவு**

☆ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

☆ மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

(5-86-48)

# கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தோர் கௌரவிப்பு

வலி.வடக்கு,ஒக்.20

கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த 18 பேர் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மத்தியஸ்தர்க்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், சின்னம் சூட்டும் நிகழ்வும் யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மாநாட்டு மண்டபத்தில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கப்ரின குணசிங்கமும் செயலாளர் மனோகரனும் ஏற்றி வைத்தனர்.

அதைத் தொடர்ந்து பொதுச் சுடரினை வடக்கு-கிழக்கு மாகாண உடற்கல்விப் பணிப்பாளர் க.அருணகிரிராஜாவும் இலங்கை கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சம்மேளனத் தலைவர் ஆ.லியனகே, உப.செயலாளர் வி.வி.குணத்திலக்கா, பொதுச்செயலாளர் டி.எஸ்.ஜெயக்கொடி, சர்வதேச மத்தியஸ்தர் எம்.ஏ.பியந்த செனவிரத்தின ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

கரப்பந்தாட்ட பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை வடக்கு-கிழக்கு மாகாண உடற்கல்விப்பணிப்பாளர் க.அருணகிரிராஜா வழங்கிக் கௌரவித்தார்.

மத்தியஸ்தர்களுக்கான அடையாள அட்டைகளை சம்மேளனத் தலைவர் ஆலியனகே வழங்கினார். சின்னத்தை செயலாளர் டி.எஸ்.ஜெயக்கொடி சூட்டினார். யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் மாதுளன் நினைவுப் பரிசில் வழங்கினார்.

(8-5-86)





**மொனறாகலை நிஸ்ஸங்க தேசிய பாடசாலை மாணவர்களுக்கும் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களுக்குமிடையிலான 'அஸ்ரா' வெற்றிக் கேடயத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற மொனறாகலை நிஸங்க தேசிய பாடசாலை மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.**

**இதில் மொனறாகலை நிஸ்ஸங்க தேசிய பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் அருகில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் நிற்பதையும் கலந்துகொண்ட பிரமுகர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும் மொனறாகலை தேசிய பாடசாலை மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.**

# பட்டதாரிகளுக்கான பயிற்சிகள்: சிலகுறைபாடுகள் அவதானிப்பு

யாழ்.மாவட்டத்தில் பட்டதாரி முன்சேவைப் பயிற்சியில் 476 பட்டதாரிகள் மட்டும் இணைந்தனர் எனும் செய்தி 10.09.2004 'உதயன்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

இதில் 538 பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டு 476 பட்டதாரிகள் பொருத்தமான அரச துறைப்பதவிகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

5 நிலையங்களில் மூன்று மாதப் பயிற்சிகள் கணனி, தொடர்பாடல், நிர்வாக, நிதிநடைமுறை மற்றும் ஆங்கில துறைகளில் யாழ்மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் ரி.சிவதட்சணாமூர்த்தி தலைமையில் இடம்பெற்று வருகின்றது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனறால், 17.05.1999 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசின் முன்னுரிமை செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் 10 ஆயிரம் பட்டதாரிகள் நியமனம் செய்யப்பட்டனர்.

இவர்களில் 285 பட்டதாரிகள் முதற்கட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் எத்துறைகளில் தெரிவு செய்யப்பட்டனரோ அத்துறை சார்ந்த அமைச்சுக்களினால் விஷேட பயிற்சி அளிக்கப்பட்டன.

இதில் உள்ளூராட்சி உதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்களை வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளர், பிரதம செயலாளர்கள் பொறுப்பேற்று ஒரு மாத விஷேட பயிற்சியை (17.05.1999 - 17.06.1999) திட்டமிடல், பொதுநிர்வாகம், உள்ளூராட்சி நிர்வாகம், நிதிநிர்வாகம், முகாமைத்துவமும் அபிவிருத்தியும் போன்ற துறைகளில் துறைசார் நிபுணர்களினால் நடத்தப்பட்டது.

பயிற்சியின் போது மூன்று நேரகால உணவுகளை அரச தங்குமிடங்களில் தங்கவைத்து வழங்கியதுடன் பயிற்சி நிலையங்களுக்கு வாகனங்களில் இறக்கியேற்றி வந்து பயிற்சி வழங்கினர்.

**செய்திக் கட்டுரை**

இதில் குறிப்பிடக்கூடிய முக்கிய விடயம் யாதெனில், பயிற்சியின் இடை நேரங்களில் இடைநேரம் வழங்கப்பட்டு சிற்றுண்டிகள், தேநீர் என்பன இரண்டு வேளைகளிலும் (காலை, மாலை) வழங்கப்பட்டன.

பயிற்சி நடைபெற்று விரிவுரையாளரின் விரிவுரை முடிவடையும் நேரத்தில் விரிவுரைக்கான விளக்கக் குறிப்புக்கள் (HAND OUTS) வழங்கப்பட்டு அதில் உள்ள உள்ளடக்கம் சுருக்கமாக இறுதியில் குறிப்பிடப்படும்.

பின்னர் வாரத்திற்கு ஒரு முறை களநிலை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கும் பல்துறை வெளிப்பயிற்சி வழங்கப்பட்டது.

இதேபோலத்தான் இன்றும் அதே ஜனாதிபதியினால் 40 ஆயிரம் பட்டதாரிகள் உள்வாங்கப்பட்டு ஒவ்வொரு மாவட்ட அரசாங்க அதிபரின் கீழ் (முதலாம் கட்டம்) ஒப்புவிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்படுகின்றது.

ஆனால், ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 135 இற்கும் மேற்பட்டோர் பல்வேறு பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், முதலாம் கட்டடத்தில் இடம்பெறும் பயிற்சி நெறியில் ஆண்களை விட பெண்களே விஞ்சியவர்களாக பயின்று வருவதுடன் இருபாலாரும் சலிப்படைந்த நிலையிலேயே உள்ளனர்.

இங்கு பல குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

▲ பயிற்சியின் போது இடைநேரங்களில் தேநீர், சிற்றுண்டிகள் வழங்கப்படுவதில்லை.

▲ பயிற்சி முடிவில் விளக்கக் குறிப்புக்கள் (Hand Outs) வழங்கப்படுவதில்லை.

▲ புரொஜெக்ரர் மூலம் விளக்கமளித்தல் செயற்பாடுகள் இல்லை.

▲ களநிலைகளுக்கான சுற்றுலா செயற்பாட்டு அறிகுறிகள் தென்படவில்லை.

▲ மிகை சுமையான (Excess Burden) நேரம் விரிவுரை.

▲ தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கான போக்குவரத்துக் கஷ்டம்.

இதில் மேற்கூறப்பட்ட 6 விடயங்களில் முதல் 4 விடயங்களாவது செயற்படுத்த முன்வர வேண்டும்.

பயிற்சி விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவு எதிர்காலத்தில் வழங்கத் தயாராக இருக்கின்ற போது ஏன் எதிர்காலத்தில் பொது மக்களுக்கான சேவையில் ஈடுபடவுள்ள அரசாங்கத் துறை நியமன தாரர்களுக்கு இடைநேரங்களில தேநீர், சிற்றுண்டி வழங்கக் கூடாது? வழங்கினால் அவர்களது பயிற்சி செயற்பாடுவினைத் திறனானதாக இருப்பதுடன் பட்டதாரி பயிற்சியும் வெற்றியளிக்கும்.

**செல்வராஜா ரமேஷ்**
உள்ளூராட்சி உதவியாளர், மானிப்பாய்.

எனவே, கடந்தகால அனுபவங்களையும் ஏனைய வெளிமாவட்ட பயிற்சி நிலையங்களை விட யாழ்.மாவட்ட பட்டதாரி பயிற்சி வினைத்திறன் வாய்ந்த ஒரு பயிற்சியாக அமைய பயிற்சிக்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும், 5 பயிற்சி நிலையங்களுக்குப் பொறுப்பாய் இருக்கின்ற யாழ்.மாவட்ட இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் அவர்களும் உரிய காலத்தில் உரிய நடவடிக்கை எடுத்தால் சிறப்பாக அமையும் என பட்டதாரிகள் கோருகின்றனர். ☆

# நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும் பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.



எஸ்-லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று பார்த்து வாங்குங்கள்

S-lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.


## காய்ச்சலால் நோயாளர் அதிகரிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் காய்ச்சல் மற்றும் வயிற்றுளைவு ஆகியவற்றினால் பாதிக்கப்படுவோர் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

பத்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இவற்றினால் பாதிக்கப்பட்டு பிரதேச ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையையடுத்து காய்ச்சல் மற்றும் வயிற்றுளைவு ஆகியவற்றால் பாதிக்கப்படுவோர் அதிகரித்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தினமும் பதினைந்துக்கு மேற்பட்டோர் இந்நோய்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டும், நூற்றுக்கு மேற்பட்டோர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றும் உள்ளனர். (8-117)

## இளங்கலைஞர் மன்றத்தில் வாணி விழா

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணி விழா நிகழ்வுகள் நேற்று மன்ற அரங்கில் ஆரம்பமாகின. மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறும் இந்நிகழ்வுகளில் இரண்டாவது நாளான இன்று மாலை 5மணிமுதல் செல்வி ராமஜது நந்தினியின் இசையரங்கு, செல்வன் குமரேஸ் பஞ்சமூர்த்தியின் இசைக் கச்சேரி, திருமதி குமுதினி ஜெயரூபனின் மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி ஆகியன இடம்பெறும்.

நாளை மாலை 5மணிமுதல் யசோதா சந்திரகுமாரின் பாட்டுக்கச்சேரி, நியூ வீணா கானம் இசை மன்றத்தின் வாத்தியப் பிருந்தா திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரனின் இசைக் கச்சேரி திருமதி வஸந்தி குஞ்சிதபாதம் தயாரித்து வழங்கும் பாரத கலா கேந்திர மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி ஆகியன இடம் பெறும். (3)

# விழி நீர்க் காணிக்கை



எமது நண்பரும் காவேரி சில்க்ஸ்,
லிட்டில் இந்தியன் பெஷன் ஆரம்பகால
ஊழியருமான

## கந்தையா கனகரத்தினம்

அவர்களது அகால மரணச் செய்திகேட்டு நாம் அதிர்சியும், வேதனையும் ஆறாத்துயரமும் அடைகின்றோம். அமரருக்கு எமது விழி நீர்க் காணிக்கையைச் செலுத்துவதோடு, பிரிவால் வருந்தி நிற்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

டாட் என்ரபிறைஸ் உரிமையாளரும், ஊழியர்களும்.

(37795)(43-16-18)

# மரண அறிவித்தல்

## நாகமுத்து சுந்தரலிங்கம்



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து சுந்தரலிங்கம் அவர்கள் 16.10.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-அன்னம்மாவின் மகனும் நல்லதம்பி-ஆச்சிமுத்துவின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் தங்கேஸ்வரன் (சுவிஸ்), தயாநிதி (பிரான்ஸ்), சிவநிதி (கனடா), காலஞ்சென்ற சுகந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சுமதி (சுவிஸ்), மனோஜெயந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஐங்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஷன், சுதர்சன், கிஷாந், கிருஷ்ணி, கிதுஷன், அபிஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 1.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் ஏழாலை உசத்தி ஓடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*ஏழாலை வடக்கு,*
*(VC அடி)*
(37793)(33-43-16-18)

தகவல்:
திருமதி சந்திராதேவி,
சுந்தரலிங்கம் (மனைவி).

யாழ்ப்பாணம் ... (library stamp)

**லக்சுமி சினிமா** இணுவில்
20-10-2004 முதல் அப்பாஸ். நந்திதா. கருணாஸ். ராஜேஸ் நடிப்பில்
**சீந்தாமல் சிதறாமல்**
காட்சிகள் நேரம்: 11.00, 3.00, 7.00 (ரீல்ஸ்)
(37792)

# தென்மராட்சி வலயத்தில் சிறந்த நூலம் தெரிவு

சாவகச்சேரி,ஒக்.20

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நூலக வாரத்தை ஒட்டி இடம்பெற்ற சிறந்த நூலகத் தெரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி நூலகம் சிறந்த நூலகமாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது.

இப் பாடசாலைக்குரிய விருது அம்பாறை டி.எஸ். சேனநாயக்க மத்திய மகாவித்தி யாலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடை பெறவுள்ள தேசிய நூலக தின விழாவில் வழங்கப்படவுள்ளதாகத் தென்மராட்சி கல்வி வலய நூலக இணைப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

(4-31)

## கண்ணீர் அஞ்சலி



எமது நீண்டகால நண்பரும்
யாழ்.காவேரி சில்க் ஆரம்பகால
ஊழியருமான
**கந்தையா கனகரத்தினம்**
அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆறாத்துயரும் அடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம.

உரிமையாளரும் ஊழியர்களும்
~ சுமங்கலி~சாவகச்சேரி.

(ச-38428) (32-18-14)

## கண்ணீர்க் காணிக்கையும் அஞ்சலியும்



அரியாலையைச் சேர்ந்தவரும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும் காவேரி சில்க்ஸ் ஆரம்பகால ஊழியருமான **கந்தையா கனகரத்தினம்** அவர்களின் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியையும் தீராத மனக் கவலையையும் அளிக் கின்றது. அவரது மறைவால் துயருறும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

~ உரிமையாளரும், ஊழியர்களும்
**சாரங்கன் நகைமாடம்**
45c, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 6059

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 2480, FAX: 6972

(ச-38414) (32-18-14)

## ஊழியர் தேவை

பொருள்களைப் பொதிசெய்து விநி யோகம் செய்யக்கூடிய முன்னனுபவம் வாய்ந்த ஊழியர் தேவை. திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். உறவி னர் அல்லாத வர்த்தக உரிமையாளர் அல்லது கிராமசேவகர் கடிதம், சிபார்சு கடிதம் மற்றும் உமது சுய விவரத்து டன் நேரில்வரவும்.

**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 2222567

(ச-38430) (32-18-14)

**ராஜா** யாழ்ப்பாணம்
இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
**7/G ரெயின்போ காலனி** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (ச-38041)

**நிர்மலா** சங்கானை
அர்ஜுன் நடித்த
**அரசாட்சி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
NUTTY PROFESSOR-2 வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.

**சித்தி சினிமா** பண்டத்தரிப்பு
விஜய். ஜோதிகா. கிரண் நடிப்பில்
**திருமலை** (ரீல்ஸ்)
காட்சிகள் நேரம் 3.00, 7.00
சனி ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(ச-17902)



# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை நடராஜா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

இமையாணன், உடுப்பிட்டியை (புறாப்பொறுக்கி) பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராஜா நேற்று (19.10.2004) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

*மதுசன் ஸ்ரோர்ஸ்,*
*சந்தை வீதி, உடுப்பிட்டி.*
(ச-38429) (32-18-14)

தகவல்:
செ.புவனேந்திரராசா
(புவனம்) மருமகன்.

## சின்னவி சீனியர்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மயிலங்காட்டை தற்காலிக வசிப்பிடமாகவும்கொண்ட சின்னவி சீனியர் நேற்று (19.10.2004) மாலை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியை கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(37800) (32-18-14)

தகவல்:
குணசிங்கம், சேகர் (பிள்ளைகள்)

## Jayoda ஜயோதா ජයෝද

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6470275 முதல் 6483057 வரை
சீட்டிழுப்பு இல. 77 திகதி 18-10-2004

வெற்றி எண்கள் **4 6 3 4 5 0** சுப்பர் எண் **6**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,17,11,125/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,20,13,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 112 | 5,000/- | 5,60,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,134 | 500/- | 5,67,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,337 | 50/- | 5,66,850/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,12,313 | 10/- | 11,23,130/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 13 | 5,000/- | 65,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 1,000/- | 1,10,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,138 | 100/- | 1,13,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,236 | 20/- | 2,24,720/- |
| மொத்தம் | 1,37,413 | | 6433,100/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 64,33,100/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,23,28,575/-**

தொடர் இல. 7439165 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 21 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6476883-2-77
6480574-9-22
6478819-2-16
6478788-0-70
6477918-9-97
6472172-2-34
6471486-6-64
6476260-1-05

## தையல் போட்டி பிற்போடப்பட்டது

தென்மராட்சி,ஒக்.20

தென்மராட்சி கல்வி வலயத்தி னால ஆரம்பப்பிரிவு மாணவர்களிடையே எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்தப்பட விருந்த தையல் போட்டி ஒக்ரோபர் 31 ஆம் திக திக்குப் பிற் போடப்பட்டிருப் பதாக தென்மராட்சி வலயக் கல்விப்ப ணிப்பாளர் வ.செல்வ ராசா அறிவித்துள் ளார்.

(4-11)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை கற்பகம்

மீசாலை, மீசாலை மேற்கு, ஊர் எல்லைத் தெருவை வசிப்பிட மாகக் கொண்ட திருமதி செல்லத்துரை கற்பகம் (பொன்னம்மா) அவர்கள் கடந்த 18.10.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இளையதம்பி செல்லத்துரை (C.G.R) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - அன்னப் பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் சிவபாக்கி யம் (U.K.), வசந்தமலர் (ஓய்வூதியர், கச்சேரி, யாழ்ப்பாணம்), இரா சேந்திரம (நில அளவையாளர் - கனடா), இராசரட்ணம் (C.G.R வவு னியா), ஜீவரட்ணம் (U.K.), ரவீந்திரன் (கனடா), சுரேந்திரன் (Murdach University, Western Australia) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினராசா (U.K.), விஜய (ஓய்வூதியர், உதவி அர சாங்க அதிபர் காரியாலயம், யாழ்ப்பாணம்), யசோ (கனடா), தர்ம சோதி (ஆசிரியை, வ/நெலுக்குளம் மகா வித்தியாலயம்), மேனகா (கனடா), Dr.வதனலீலா (Australia) ஆகியோரின் மாமியாரும் விமல்பிரகாஷ் (யாழ்.இந்து, Australia), விஜயபிரபா (வேம்படி மகளிர் கல்லூரி, Kinston College International Colombo ஆசிரியை), ஜெயபிரகாஷ் (யாழ்.இந்து, மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடம்), பிரசன்னியா (U.K.), ரஜின் (Canada), பிரவின் (கனடா), சரண்யா (வவுனியா கன்னியர் மகாவித்தியாலயம்), கோபிகா (U.K.), ராஜி (U.K.), பகிரன் (U.K.), சுகந்திகா (வவுனியா), மாத வன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.10.2004) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடத்தப்பட்டு, நண்பகல் 12 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

*முகவரி:*
*மீசாலை மேற்கு,மீசாலை.*
T.P. :0777649120

தகவல்:
கனகசுந்தரம் விஜய
(மருமகள்).

## திருமதி சௌபாக்கியவதி பவஸ்ரீனா பற்றிக் ஜோன்சன் (குஞ்சு)



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் சுன்னா கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சௌபாக்கியவதி பவஸ்ரீனா பற்றிக் ஜோன்சன் (குஞ்சு) அவர்கள் நேற்று (19.10.2004) செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பற்றிக் ஜோன்சனின் அன்பு மனை வியும் அருள்ராஜின் (மாணவன், ஆண்டு 1, புனித மரியாள் வித்தியாலயம், O.L.R) அன்புத் தாயாரும் திரு.திருமதி அருளானந்தம் - நாகேஸ் வரி தம்பதிகளின் அன்பு மகளும் தவசீலனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2004) புதன்கிழமை காலை 10 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத் தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் றொட்டியாலடி சேமக காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேசன் றோட்,*
*சுன்னாகம்.*
(சி-38427)(32-14-18)

தகவல்:
கணவர்.

## திருமதி சின்னத்துரை செல்லாச்சி



ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை செல்லாச்சி 18.10.2004 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் பாலசிங்கம் மற்றும் காலஞ் சென்ற கோபாலசிங்கம், காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நாகமுத்து சின்னையாவின் சகோதரியும் அன் னம்மா, கனகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஸ்ரீபாஸ்கரன், சசிந்திரா, சிறிதரன், டசிந்திரா, றேனுஜா, அனுசியா, தனுசியா, செல்வக்குமரன, திருக்குமரன், பாலச்சந்திரன், தவராசா, ஜெகதீஸ்வரன், சுபாஸ்கரன், மோகன் ஆகியோரின் பேர்த்தியும் ஜெஸ்மின், ஜெலீனா, மௌலீனா, டன்சிகா, டனுசன், டினோஸ், அனோஷ், சுவீன்ஷன், கௌதமன், கௌஷாந்த், தர்ஷனா, கௌசிகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்துமயானத்திற்குப் பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*56/10, ஆத்திசூடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(37797)(32-14-18)

தகவல்:
சி.பாலசிங்கம் (மகன்).

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**பொன்னுச்சாமி சுப்புச்சாமி**

கடந்த 05.10.2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வம் நாதஸ்வர வித்துவான் **பொன்னுச்சாமி சுப்புச்சாமி** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.10.2004) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பகல் 11.30 மணிக்கு திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத் தில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன் புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் வீதி,
நல்லூர்.
(37799)(32-14-18)

குடும்பத்தினர்
(சு.பாலமுருகன் - நாதஸ்வரம்).



ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவின் தலைவரும் அரசியல்துறைப் பொறுப்பாளருமான சு.ப.தமிழ்ச்செல்வன் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்து கலந்துரையாடினர். அப்போது எம்.பி. ஒருவருக்கு தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுக்கும் போது எடுக்கப்பட்ட படம் இது.

# ஊடகவியலாளர் நேற்று நகரில் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம்,ஒக்.20

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைச் சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தக்கோரியும் -

வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஊடகவியலாளர்கள் மீதான கொலை மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டித்தும் நேற்று யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக அடையாள எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 4 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்றாகும். அதனையொட்டி நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு மற்றும் யாழ். பத்திரிகையாளர் சமூகம் ஆகியன எதிர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

நேற்று நண்பகல் 12 மணிக்கு யாழ். பஸ நிலையம் முன்பாக ஒன்றுகூடிய குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள், அமைதியான முறையில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்த சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்கள் வருமாறு:-

★ "பத்திரிகையாளர்களைப் படுகொலை செய்து ஊடக சுதந்திரத்தைக் கொல்லாதே!"

★ "நேற்று நிமால், இன்று நடேசன் நாளை யார்?"

(4-5-7-13-86-ரி)

## பேச்சுக்கான மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இவ்விடயத்துக்காக இலங்கைக்கு நேரில் வருவது நல்லது என்ற தமது அபிப்பிராயத்தை ஜனாதிபதி வெளியிட்டார் எனத் தெரிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸனே நேரில் வந்து அரசுத் தரப்புடனும், கிளிநொச்சியில் புலிகள் தரப்புடனும் பேசி, பேச்சுக்களை மள ஆரம்பிப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என ஜனாதிபதி குமாரதுங்க கோரினார்.

இந்தத் தகவல் ஒஸ்லோவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, நிலைமையை ஆராய்ந்த ஒஸ்லோ அரசு, வெளிவிவகார அமைச்சரை இலங்கைக்கு நேரில் அனுப்பிவைக்க இணங்கியதாகக் கூறப்படுகின்றது.

பெரும்பாலும் அடுத்த மாத நடுப்பகுதியில் பீற்றர்ஸன், புதிய பேச்சு முயற்சிகளை ஆரம்பிப்பதற்காகக் கொழும்பு வருவார் என எதிர்பார்க் கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை, அவரது லண்டன் இல்லத்தில் நோர்வே அனுசரணைக்குழுவின் பிரதிநிதிகளான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் சந்தித்துப் பேசியபோது வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனின் உத்தேச கொழும்பு விஜயம் குறித்து அவருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவந்தது.

தமது கொழும்பு விஜயத்தின்போது அரசுத் தரப்பையும், புலிகளையும் சந்திக்கும் பீற்றர்ஸன், பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு வழி செய்யும் திடமான நடவடிக்கைகளை முன்னெடுப்பார் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

தற்போது நோர்வே சென்றிருக்கும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசமைப்பு விவகாரக் குழு, அங்கு வெளிவிவகார அமைச்ர் ஜான் பீற்றர்ஸ்ன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் மற்றும் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்துப் பேசுகின்றது.

அப்போது ஜான் பீற்றர்ஸனின் உத்தேச இலங்கை வருகை பற்றியும் அதையொட்டிய ஏற்பாடுகள் மற்றும் நோக்கங்கள் ஆகியவை பற்றியும் கூட ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-3)

## பாதுகாப்பு அமைச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பாதுகாப்பு, சட்ட ஒழுங்குகள் அமைச்சுக்கு 2 ஆயிரத்து 35 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு 5 ஆயிரத்து 208 கோடியே ஒதுக்கப்பட்டிருந்தது. நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம 2005ஆம ஆண்டிற்கான செலவின மதிப்பீட்டு அறிக்கையை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அடுத்த நிதியாண்டிற்கான மொத்த செலவினங்கள் 43 ஆயிரத்து 891 ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வரும்போது உறுதியளித்ததன்படி அரச ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வை வழங்கவும், சமுர்த்திக் கொடுப்பனவுகளை அதிகரிக்கவும், புதிய நியமனங்களை வழங்கவும் கூடியவகையில் அவற்றிற்கான விசேட நிதி ஒதுக்கீடுகள் எதுவும் காணப்படவில்லை.

சுகாதார அமைச்சுக்கு 2 ஆயிரத்து 988 கோடிரூபாவும், கல்வி அமைச்சுக்கு 2 ஆயிரத்து 655 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நிதியமைச்சர் சமர்ப்பித்த மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீட்டு விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்தச் செலவினத் தொகையை நிதி அமைச்சர் எப்படிச் சமாளிக்கப்போகின்றார் என்பது பெரும் கேள்விக்குறியாக இருக்கின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள், தயாரித்த ஆடை உற்பத்தி, ஏற்றுமதி, உல்லாசப் பயணத்துறை, வெளிநாட்டு முதலீடுகள், உதவி வழங்கும் நாடுகளின் கடன்கள் என்பனவற்றின் உத்தேச வருமானத்தைக் கொண்டே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவது வழமை.

ஆனால், இன்றைய நிலையில் இவையனைத்தும் பெரும் சரிவைக் கண்டுள்ளன.

நிதியமைச்சர் நவம்பர் 18ஆம் திகதி இதற்கான விடைகளை அளிக்கப்போகின்றார். அவரது பட்ஜெட் கசப்பாக இருக்குமா? இனிப்பாக இருக்குமா? அல்லது கசப்பையும் புளிப்பையும் கலந்து அவர் கொடுப் பாரா? பதில் நவம்பர் 18இல்தான்.

(க-3)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- சென்றுள்ளனர் என ஏறாவூர் பொலீஸ் நிலையத்தின் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஏ.எம்.கீரகல தெரிவித்தார்.

சம்பவம் இடம் பெற்ற இடத்திலி ருந்து ரி- 56 ரக துப் பாக்கிக்குப் பயன் படுத்தப்படும் 18 வெற்றுத் தோட்டாக்க ளைத் தாம் கண்டெடுத் துள்ளனர் என வும் அவர் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

(க-4)

## திருமலை தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய சொர்ணம் -

மண்ணையும், மக்களையும் அவர்களின் வாழ்வுரிமைகளையும் மீட்பதற்கு ஆயுதப் போராட்டம் எவ்வளவு முக்கியமோ அதேயளவு பிரதேச அபிவிருத்தியும் முக்கியமானது. இந்நிலையில், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள தமிழ் மக்களின் வாழ்வை அபிவிருத்தி செய்ய அனைவரும் முயற்சிக்க வேண்டும் - என்று கேட்டுக்கொண்டார்.

இச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது.

இச்சந்திப்பையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், மா.க.ஈழவேந்தன், செல்வம் அடைக்கலநாதன், துரை ரட்ணசிங்கம் ஆகியோர் அடங்கிய குழு மூதூரில் முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்டது. இவர்களுடன் திருகோணமலை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலனும் அச்சந்திப்பில் கலந்துகொண்டார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இன்னொரு பிரிவு சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் கலநதுகொண்டது. அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரன், சிவநாதன் கிஷோர், பத்மநாதன், கனகசபை ஆகியோர் உரையாற்றினார்கள். பெருமளவு மக்களும் அதில் கலந்து கொண்டனர்.

(க-3)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற செய்தி கடந்தவாரம் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

அந்த உபாதைக்குச் சிகிச்சைப் பெறவே சூசை வெளிநாடு ஒன்றுக்கு அவசரமாய்ப் புறப்பட்டுச் சென்றார் எனத் தெரியவருகின்றது.

நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளின் தலைமை விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டதாக இலங்கை அரசின் சமாதானச் செயலகம் தெரிவித்தது.

இலங்கைக் கடவுச்சீட்டில் தமது சொந்தச் செலவில் அவர்கள் பயணத்தை மேற்கொண்டனர் எனவும் சமாதானச் செயலகம் தெரிவித்தது.

(க-4-7)

## கிங்ஸ்லி இராஜநாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெய்ப்பாதுகாவலர் காயமடைந்தார்.

மட்டக்களப்பு எல்லை வீதியில் உள்ள கள்ளியங்காடு பகுதியில் அவர் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அங்குள்ள இந்துமயானம் முன்பாக இருக்கும் தனது காணியில் வேலைகளை முடித்துக்கொண்டு புறப்படுவதற்காகக் காரில் ஏறியசமயம் அவர்மீது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. சைக்கிள் ஒன்றில் வந்த இருவர் அவர் மீது பிஸ்ரலால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் கிங்ஸ்லி இராஜநாயகம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது மெய்ப்பாதுகாவலரான ஹேமந்த விதானகே என்பவர் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் அஜ்மீர் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார். அதன்பின்னர் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

உயிரிழந்த கிங்ஸ்லி இராஜநாயகத்துக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டவர் கிங்ஸ்லி இராஜநாயகம். தேர்தலில் 30ஆயிரத்திற்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றார். ஆனால், நாடாளுமன்றத்திற்குப் போகாமலேயே தனது பதவியை அவர் பின்னர் இராஜினாமாச் செய்தார். அவரது இடத்திற்குப் பின்னர் பா.அரியநேநதிரன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 நாள்களில் கொல்லப்பட்ட நான்காவது நபர் இவராவார். இனந்தெரியாதவர்களால் நடத்தப்படும் இந்தத் தொடர் கொலைகளால் மாவட்டத்தில் பீதியும் பதற்றமும் பரவியுள்ளன. (க-3-4-7)

## வீரப்பனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைச் சுட்டுக்கொன்றமை மிகவும் [illegible]னது என்றும் அவர்கள் மிகுந்த ஆவேசத்துடன் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். தமிழகத்திலுள்ள மனித உரிமை அமைப்புக்கள் பலவும் வீரப்பன் கொல்லப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

வீரப்பனை உயிரோடு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய வாய்ப்பு இருந்தபோதிலும், அவரை சுட்டுக்கொன்றிருப்பதன் மூலம் தமிழகப் பொலீஸார் சட்டத்தையும் மனித உரிமைகளையும் அவமதித் திருககின்றனர் என்று அந்த அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

(4-7)


புதிய கணனிக் கற்கைநெறிகள்

Diploma in Computer Programming
Diploma in Desk Top Publishing
Diploma in Computer Hardware
Diploma In Ms Office 2003
Diploma In Web Designing
Diploma in Video Editing

குழுக்களாக கற்கும் வசதி
இலவச பாடக் குறிப்புக்கள்
கூடியளவு செய்முறைப் பயிற்சி வகுப்புக்கள்
அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கு விசேட வகுப்புக்கள்

ஆரம்பம் 23.10.2004

Jaffna Technical Institute
No. 07, PalalyRoad,
Jaffna
T.P. 021-222-3335

CHEMISTRY
GROUP CLASSES
DIAS
B.Sc. (Hons) Spl. Che.
THEORY
☆ INORGANIC
☆ GASES
PAPER
☆ GENERAL
☆ GASES
☆ PHASE EQUILI BRIA
☆ ஆண்டு ரீதியான (1990-2004)
ஆரம்பமாகின்றன.
104/4. [illegible] வீதி, [illegible]

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off stanly Rd)
Tel:0777222422

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
QUICK BOOKS PRO + ACCPAC + MYOB
ஆரம்பம் 23-10-2004
காலம்:- 4மாதம்





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.